உ

கடவுள் துணை.

அகத்தியமுனிவரருளிச்செய்த

பெருநூல்.

வயித்தியகாவியம்

௲௫௱.

இஃது.

சிதம்பரம்

குருநாதசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

நுங்கம்பாக்கம்

அருணகிரிமுதலியார்

அவர்களது

அம்பாளச்செந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை-ஆனைகெவுனி-பொம்மலையாதெருவு

1-வது, நெ. வீடு.

1897

உ

கடவுள் துணை.

அகத்தியமுனிவரருளிச்செய்த வயித்தியகாவியத்தின்

பொருளட்டவணை.

பொருளட்டவணை.

முற்றிற்று.

உ

சிவமயம்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த

வயித்தியகாவியம்.

௲நூா.

காப்பு.

பாருடன்கணேசன்பாதம் பணிந்துமுக்குணங்களாய்ந்து
வாகடத்தொகுதியெல்லாம் வகுத்தசூத்திரமதாக்கி
யாகமவிதியின்ஞாலத் தடர்ந்திடும்நோய்களெல்லாம்
போகநல்மருந்துசொல்வோம் புலத்தியாபொருந்திக்கேளே. க

நால்நாடிவகை.

பொருந்திக்கேள்பொருந்திக்கீழே புகன்றேறுஞ்சுழியைப்பற்றி
யெழுந்ததோர்நாடிதானு மெழுபத்திராயிரந்தான்
தெரிந்ததோரிவற்றில்பத்துத் தெசநாடியிவற்றில்மூன்றும்
பரிந்ததோர்வாதபிததம் படரையுமறிந்துபாரே. உ

அறிந்துதானிதற்குநாம மறைந்தனரறிவுள்ளோர்கள்
தெரிந்ததோரிடைதான்வாத மியன்றியபின்கலைதான்பித்தஞ்
செறிந்துகொள்சுழிதானையஞ் சேர்விடமெங்கேயென்னில்
பிறிந்துகொள்மலமாம்வாதம் பேர்பெறுநீராம்பித்தம். ௩

பித்தத்தின்கீழேஅய்யம் பெரியதோர்விந்திற்சேருங்
குத்தமேசேருமையங் குறிகளைக்குறித்துக்காணும்
பித்தத்தைப்பிரித்தும்நன்றாய் பேசுவோப்பேதம்போக்கிப்
பத்தத்தைக்குறியாயெண்ணிப் பரிவுடனறிந்துபாரே. ௪

பாரப்பாஇடையிடக்கால் மாறியேகபால்ஞ்சாடி
சாரப்பாவலக்கரத்திற் சார்ந்திடும்பின்கலைதான்
சேரப்பாஇடதுகாலிற் சென்றுதான்கபாலத்தேறிப்
போரப்பாஇடகரத்திற் பொருந்திப்போஞ்சுழிணைகேளே. ௫

கேளப்பாபுருவமத்திச் சுழினையாமிடையின்மூன்றில்
நாளப்பாநவதாதாகி நடத்திடும்நாடிபாரு
கேளப்பாநாடிபத்து தசவாயுவுடனேசேரும்
சூளப்பாதசதானங்கள் சொல்லுவேன்சொல்லுவேனே. சு

வேறு-நாடிஸ்தானம்.

சொல்லுகிறேன்காமியந்தான்குதிகால்சந்து சொற்பெரியவுந் திகரமார்புகண்டஞ், சொல்லுகிறேன் புருவமத்திகாதுமூக்கு தொகைபத்தில்வந்திருக்குந்தாதுமூன்றுஞ், சொல்லுகிறேன்காத்தொழிந்தநாடிமாறில் சோதிக்கில்தசதானந்துடிப்புக்காணில், சொல்லுகிறேன்சாகான்காண் பிணிதான்திருந் துஞ்சுகிறவிபரமதைச் சூட்டுனேறே. எ

துஞ்சியெழும்வாதபித்த முயிர்தானப்பா சூக்ஷமாய்த்தன்றிய துசுழன்றுதேய்ந்து, மிஞ்சியேயஸ்திபற்றிக் குறுகித்தம்மில் மேவியேமார்புள்ளேவாங்குமாகில், அஞ்சியேபட்சமொன்றி லடங்குஞ சீவன் அரகராஅஸ்த்தையிதுஅறிந்துஇந்தப், பஞ்சியேசூஸ்திரமாம் வாதம்பித்தம் பக்குவத்தைநன்றாய்ப்பார்த்தறிதநன்றே. அ

வேறு-சமதாது.

அறிவதுவாதந்தானு மாத்திரையரைதானேடில்
செறிவதுபித்தமப்பா சேர்சமனென்றுப்பின்னும்
பிரிவதுஅய்யந்தானும் பிரண்டதுகால்தானேடி
மறிவதுசமனதாகில் மயக்கமுமில்லைகாணே. கூ

வாதகுணம்.

காணப்பாவாதமீறில் கால்கைகள்பொருந்திநோகும்
பூணப்பாகுடல்புரட்டும் மலஞ்சலம்பொருமிக்கட்டும்
ஊணப்பாகுளிருங்காச்ச லுடம்பெல்லாங்குத்துவாய்வு
வீணப்பாகுதமிறுக்கும் வேர்வையும்வேர்க்குந்தானே. ய

பித்தகுணம்.

தானென்றபித்தமீறில் சடமெல்லாங்காந்தகாணு
மூனென்றவாந்திவாய்நீ ரூறியேஒழுகுஞ்சால
வானென்றமட்டில்வேகும் மண்டையில்குத்துண்டாகும்
தேனென்றவிக்கல்மூர்ச்சை செவியடைப்புண்டாம்பாரே. யக

சேத்துமகுணம்.

பாரப்பாஅய்யமிறில் பாசத்தினனல்தான்மீறும்
நேரப்பாஇளைக்குமதேகம் நெஞ்சுடன்விலாவுநோவாந்
தாரப்பாசுரமுங்காயும் சாதமுமொருக்குநாளில
ஓரப்பாரெத்தங்கக்கு முடல்வற்றுஞ்சுரம்பெருமே. ௰௨

நாடிநடை.

ஆமப்பாவாதந்தானு மனநடைகோழியானை
தாமப்பாபித்தந்தானும் தவளையைப்போலேபாயும்
போமப்பாஅய்யந்தானும் சர்ப்பம்போலோடுமோடும்
நாமப்பாகண்டுசொன்னோம் நரம்பொன்றில்நாடிமூன்றே. ௰௩

நாடிநிறம்.

மூன்றுபேர்நிறமுஞ்சொல்வேன் மூதல்வாதங்கறுப்புச்செம்மை
மான்றியபசுமைபச்சை மஞ்சளாயிருக்கும்பித்தம்
தோன்றியவெண்மையப்பா சோர்வில்லாவையமாகும்
ஊன்றியநிறங்கள்சொன்னேன் உத்தமரறிவார்தானே. ௰௪

பஞ்சபூதவகை.

தானென்றவஞ்சுபூதஞ் சதையெல்லாம்பிருதிவாகு
மானென்றரொத்தந்தண்ணீர் மைந்தனேயம்புவாகும்
தேனென்றவெதுப்புந்தானும் தேவியுன்கூறேயாகும்
மானென்றவாசிதன்னில் வருகெந்தமருதல்வாய்வே. ௰௫

அறிந்திடுமெல்லாமொன்று யாலிக்குந்திரவானந்தான்
பிறிந்திடும்பூமிதானும் பேரெழுநாசிதன்னில்
செறிந்திடுமம்புந்தானுஞ் சேர்ந்திடும்நாவிலேதான்
முறிந்திடுவன்னிதானு மூன்றிடுங்கண்ணிலேதான்
பறிந்திடும்வாய்வுந்தானும் பரிசிக்குமெங்கும்பாரே. ௰௬

பாரப்பாகாதிலேதான் பரிசிக்கும்வானமைந்தா
போரப்பாவஞ்சுபேர்க்குள் பொல்லாதபேர்தான்மூவர்
பாரப்பாவாதம்வாய்வு அப்பனேபித்தம்வன்னி
நேரப்பாவையமப்பு நிரைந்தவையிதுமூன்றுமே. ௰௭

ஆமப்பாமூன்றுபேர்க்குள் ஆதாரம்வாய்வேயாகும்
ஏமப்பாவாய்வுசேரி லெண்பிலமுடைத்தாய்நிற்கும்

வேமப்பாவன்னி கூடில் வெகுநீருகுமாளும்
சோமப்பாசிக்கிமின்ற நோயெல்லாந்தணிக்குந்தானே. ௰அ

தோஷகுணம்.

தாவென்றவன்னிவாய்வு தாண்டிமேற்கொண்டுதானல்
தானென்றசுரத்தாற்றேடங் கண தாபமிடியாகுந்
தாவென்றவன்னியோடு அப்புவுஞ்சாருமாகில்
தானென்றசீததோஷஞ் சார்ந்திடுந்தப்பில்லாதே. ௰௬

தப்பில்லாததோஷந்தானுஞ் சார்ந்திடும்வாறுகேளாய்
தப்பில்லாவன்னிவாதங் கடுந்தோஷஞ்சாத்தியமாகும
செப்பில்லாப்பித்தத்தோடு சேரனல்வெண்மையாக்கிச்
செப்பில்லாவையத்தூடுஞ் சிவப்பெனும்வாயுவாமே. ௨௰

வாய்வுதானடங்கிற்றானலமைந்தனே தோஷம்போகும்
வாய்வுதானுப்பித்தானல் மண்ணொடுநீருமொன்றும்
வாயுவுஞ்சலந்தான்ரெண்டால் மைந்தனேவன்னிமாளும்
வாய்வுதானண்டஞ்சேரில் மண்டல ஓசையாமே. ௨௧

தோஷக்குறி.

ஆமப்பாஓசையேழுமலரொளிவிழியஞ்சாகும்
காமப்பாகாசிமூன்றும்நாவினிலிரண்டதாகும்
ஓமப்பாவிந்தநீர்மை யுணர்ந்தவர்யோகியாகும்
வேமப்பாகாசிதன்னில் விழுகுறிவிளம்பக்கேளே ௨௨

மரணக்குறி.

கேளப்பாதினர்தான்மூன்று கெடிபிடைகளே தான்பாயில்
வாளப்பாவருடம்ரொண்டில் மறலியூர்புகுவான்பண்பாய்
நீளப்பாதினமிரண்டும் பின்கலைதானேபாயில்
மூளப்பாதேகந்தானு மூவாண்டில்மரணமாமே. ௨௩

மரணமாந்தினமாம்பத்து வுபயத்தில்வாங்குமாகில்
மரணமாந்திங்களொன்றில் மைந்தனேகண்டுகொள்வாய்
மரணமாமூகருவிட்டுவாய்வழிவாய்வுபாயில்
மரணமாந்தினந்தான்மூன்றில் வளம்பெறவறிந்துபாரு
மரணமாமலங்கள்மூன்றும் வற்றினால்பட்சமொன்றே ௨௪

வேறு.

ஒன்ருகவாய்நீருரி ரவிமேலுமியத்
தன்ருகத்தானு மிரவிமறைந்திருந்தாக்கால்
ஒன்ருகமூன்றுதிங்கள் பொறுத்தவுடன்பொன்றிறிவார்
நன்ருகநிழலேயிலவீழ்வர்காண் பட்சம்ரெண்டே உரு

வேறு-தோஷவகை.

காணப்பாதோஷங்கள்பிறக்கும்போது காணுநீகுறிசொல்வோம்கருதிப்பாரு,தோணப்பாவுண்ணுக்குவுதடுகொஞ்சு சுகமானகாதுபல்குறுகுமாகில், வீணப்பாதினமூன்றில்மரணமாகும் மேலானவன்னிக்குத்தோஷமென்பார், ஊணப்பாவற்றுநின்ற பித்தத்தோர்க்கு உடம்புபருத்து திணுலுணக்கக்கேளே உசு

கேளப்பாமதியாறில் சாவுண்டாகும் கேடிலேயத்தால்விளேந்ததேக்மாளுல், நாளப்பதிங்களொன்றில்சாவார்சாவார் நலமானசீவகளேகாட்டங்கேளு, வேளப்பாமேலேறிநடந்துதானல் மேன்மையுடன்சீவகளேவிடுபடாது, தாளப்பாகீழ்நோக்கிநடந்துதாளுல் தவறுவறுஞ்சீவகளேநாடி.தானே. உஎ

வேறு.

தானென்றநாடிகீழே தாண்டியேவாங்குமாகில்
தானென்றவுயிர்தான்மாளுஞ் சாதகமின்னங்கேளு
தானென்றமூன்றுநாடி தாவசங்குறைந்துபின்னும்
தானென்றவாதபித்தந் தம்பித்துஅய்யமீறில்
தானென்றநிடங்கொண்டாலுஞ் சாவதுதிண்ணமாமே. உஅ

தோஷநிவிர்த்தியறிய.

ஆமப்பாவாதபித்தத் தாண்மையறிந்துகொண்டு
நாமப்பாமருந்துசெய்ய நலமுறுதோஷந்தீரும்
வேமப்பாபித்தமானல் வெம்பிடுமுயிர்தான்காணும்
போமப்பாவாதம்நிற்கில் பொருந்தியமருந்துநல்கே. உகூ

நல்கிப்மூன்றுநாடிநரம்பெல்லாங்குதித்துப்பொங்கி
இல்கியமேலின்மேலே யேறித்தாளுேமாகில்
மல்கியமரணமில்லே மறிந்துகீழேசாடி
லுல்கியவுயிருக்கின மற்றும்நீயறிந்துகொள்ளே. ௩0

அறிந்திடவுந்திக்கீழே யமனியாய்குதிக்குமாகில்
எறிந்திடவுயிரையுண்ணு மெய்யுமாதோஷமப்பா
செரிந்திடாதுக்திதானுஞ் சேரிடம்வாய்வுக்கப்பால்
மறிந்திடாதசநாடிக்கு மகத்தானவீடாம்பாரே. ௩௧

பாரப்பாநோயுள்ளோர்கள் பக்குவம்பார்த்துநீயும்
வாரப்பாவுமிந்திட்டாக்கால் மைந்தனே தூரப்போகில்
காரப்பாதாக்கித்தானல் குறைந்தவன்சாகான்கேளு
சாரப்பாகிட்டவீழிற் சாவதுசடுதிகாணே. ௩௨

மந்தம்வருமாறு.

காணப்பாமுறைபாடெல்லாம் காண்பதுமந்தத்தாலே
பூணப்பாமந்தமானல் புகுந்திடும்வாய்வுதானும்
வாணப்பாநோய்களெல்லாம் வாயுவால்வளரும்பாரு
மூணப்பாவப்புவன்னி முத்தோஷம்மூன்றும்பாரே. ௩௩

பாரப்பாமந்தமுண்டாம் பரிசனமுணாக்கேளு
காரப்பாமிகுந்துமெத்தக் கபளிக்குமன்னத்தாலே
வாரப்பாவிரைச்சியாலும் மாப்பண்டத்தாலுந்தானுஞ்
சேரப்பாமேதிப்பாலால் சேர்ந்திடுமந்தந்தானே. ௩௪

தானென்றவன்னத்தாலே தலைப்பட்டவுடம்பிதப்பா
தானென்றவன்னமப்பா தனிபபழிகொண்டுமீறில்
தானென்றவன்னமெல்லாஞ் சகலவித்தாகும்பாரு
தானென்றதாதுக்கெல்லாந் தத்துவமுறைக்கக்கேளே. ௩௫

கேளப்பாவெட்டைபித்தங் கெடியானவாதம்வாய்வு
வாளப்பா அய்யஞ்சீதம் வாழ்ந்திடுமன்னத்தாலே
பாளப்பாவன்னந்தானும் பகையுடன்பழியுங்கொள்ளும்
வேளப்பாவன்னத்தாலே மேகங்கள்பிறப்பைக்கேளே. ௨௬

மேகம்பிறக்கும்வகை.

மேகங்கள்பிறந்துநின்ற விதங்களைவிளம்பக்கேளு
ஆகங்களிழந்தபோது அப்பனேதினமுஞ்சென்று
போகங்கள்செய்யும்போதும் புகழ்மந்தங்கூடும்போதும்
பாகங்கள்பசியின்றேடும் பருகுஞ்சையோகத்தாலே. ௨௭

சையோகஞ்செய்யும்போதுந் தனிநின்றசுழியேயோடும்
அய்யனேஅமுதந்தன்னை அடக்கியேஅனல்தான்கொள்ளு

மெய்யடாவிந்துகாணில் விழவிழப்புண்ணுங்காணும்
மையடாமேகத்தாலே வளர்ந்ததுகிரந்திபாரே ௬௮

கிரந்தியால்விரணமுண்டாம் கெடியதிற்சீயாமேகம்
மூரந்தியவிரண்டினாலே யுலைவாயில்சூலைகாணும்
பாரந்தியமூன்றினாலே பலபலமேகங்காணும்
தூரந்தியலிங்கத்தாலே தொல்லைநோயெய்துங்காணே ௬௯

தொல்லையாஞ்சுரத்தினாலுஞ் சூழ்கின்றவாயுவாலும்
அல்லையேசெய்யுமாகி லன்னத்தைக்காட்டிடாதே
வல்லையேவன்னிராசன் வழியதுசெயவேயானால்
தொல்லையேதில்லையப்பா சூழ்ந்நேயும்வாய்வுதானே. ௭௰

வாயுவேமிகுந்ததானால் மத்தனேமேலுஞ்சேறும்
வாயுவேமிகுந்துதானால் மலஞ்சலமிரண்டுங்கட்டும்
வாயுவேமிகுந்துதானால் மலஞ்சலமிரண்டுங்கட்டும்
வாயுவினாலேயப்பா வளருத்திரரோகமாமே. ௭௧

ருத்திரரோகம்.

ஆமப்பாருத்திரரோகத் தாண்மையுளாகக்கேளு
வேமப்பாவென்பிற்பாய்ந்து மிகநெஞ்சிற்குத்துண்டாக்கி
போமப்பாபித்தந்தன்னைத் தப்பித்துப்போகொட்டாமல்
பாமப்பாபேசும்போது பதையாமற்சாவார்பாரே. ௭௨

வேறு-சுகசன்னி.

பதையாமல்செய்கின்ற சன்னிமார்க்கம் பாய்கின்றவிதங்கேளு பண்பாய்நீயும், கிதையாமலெண்ணையுடன் தீர்த்தமாடி நிரப்பவேதயிர்கூட்டிப்பொசித்துப்பின்னுங், குதையாதமந்தமுடன் புணர்ச்சிக்கூடில் கூட்டியேவாய்வுதான் கபாலத்தேறி, அதையாமல்போகிக்குமோகஞ்செய்யும் அப்பனேயசதியொடு சன்னியாமே. ௭௩

வேறு.

சன்னிதான்மூன்றுபோதுஞ் சடமெல்லாம்வேர்வைகாணும்
கன்னிதான்சுகத்தால்மைந்தா கண்கள்தான்சிவப்பேயாகும்
வன்னிதான்காற்றாலையா மகத்தானதோஷமாகு
மின்னிதான்சுகத்தில்நன்றாய் விழுந்திடும்காயம்தானே. ௭௪

மூலரோகம்.

காயத்தில்மூலரோகங் கண்டிடும்விதங்கள்கேளாய்
பாயொத்தபசியில்லாமல் பட்சிக்கிலடக்கில்வாய்வு
மாயத்திலுருத்துக்கொண்டு வலமதையடக்கும்போது
ஓயத்தகுண்டலிக்கு ளூட்புகும்வாய்வுகாணே. ௬௫

காணப்பர்வாயுவாலுங் கனத்தந்தவபானன்றன்னைப்
பூணப்பாமலத்தைக்கட்டிப் புகையெனக்கருக்கிநாளுந்
தோணப்பாமுளையைப்போலச் சுருக்கிமுன்மலந்தான்வீழில்
ஆணப்பாஅபானந்தன்னை அழுந்தவேயிருக்கும்பாரே ௬௬

இறுக்கியமூலமொன்று எழுமண்டமூலமொன்று
வறுக்கியேயுண்ணுய்நீதான் வடிக்கின்றமூலமொன்று
உருக்கியேவாயுவாலே யுதிரந்தான்கட்டிநின்று
தருக்கியபிச்சினங்கள் தான்ரத்தமூலமாமே ௬௭

மூலமேயெழுந்தபோது மூதத்தில்கனல்தான்மாளும்
மூலமேயெழுந்தபோது முளைவிழுந்துநாசமாகும்
மூலமேயெழுந்தபோதுமுழுங்கவேயிளைச்சலாகும்
மூலமேயெழுந்தபோது மூகிவில்லாக்கழிச்சற்தானே. ௬௮

கழிச்சலென்றகிராணியிலே விதமாறப்பா கண்டபித்த மனலவ தாம்வாயுவாகும், அழிச்சலென்றஅய்யநீர்மூன்றுங்கூடி அப்பனே பேதிக்கும் பிலந்தான்போகும், தெழிசசலென்றவாய்வுதான் மேக பேதி திரமானமூலத்தின்தோஷபேதி, பரிச்சலென்றசங்கரன்பேதி யென்று பாரப்பாவாயுவொன்றுஆறுமாச்சே. ௬௯

வேறு-மேகத்தின்குணம்.

ஆச்சப்பாமேகங்கேளு அப்பனேமூன்றதாகும்
நீச்சப்பாமேகந்தன்னை நிசஞ்சொன்னேன்காணுகாணு
காச்சப்பாமஞ்சள்போலக் கவிச்சணாந்தன்னிற்கண்டால்
வீச்சப்பாபித்தமேகம் விளப்பினர்விருப்பிக்காணே. ௭0

விரும்பியேசிலைதானும் வெளுத்திடல்வாதமேகம்
மருவியகவிசணாந்தான் மயிலதினிறமேயானல்
திரும்பியஅய்யத்தாலே சேர்ந்திடுமேகமாகும்
சுரிப்பியமூன்றுலப்பா தோன்றிடுங்குணங்கள்கேளே. ௭௧

கேளப்பாபித்தம்வாய்வு கெடியுடன்சேருமாகில்
தாளப்பாஞானமானதமரிலேயெரித்துவேகும்
வீழப்பாநீரைக்கட்டும்விளம்பொசிந்திழியும்பாரு
பாரப்பாசிலநேரந்தான் பளிச்செனப்பிறங்குந்தானே. ருஉ

தீரனென்றவாய்வொதுக்கில் தண்டினில்நோவுகாணும்
வாவென்றமந்தத்தாலே வாய்வுட்புகுந்தேசாடும்
காவென்றவெரிச்சல்காணும் கல்லடைப்பாகும்பின்னே
மீரென்றவாதம்வாய்வு மருவிடில்வெள்ளைகாணே. ருங

வெள்ளைதான்மைத்தவிழில் மேனியும்பொருமிக்காணும்
கள்ளமேசரீரமெல்லாம் கறுப்புடன்றழும்புமோடுந்
தள்ளவேகாதுகட்டந் தாகமுமிகுதியுண்டா
முள்ளதுசொன்னேஞ்சாமு முற்றுணர்ந்தறிந்துகொள்ளே. ருச

அறிந்திடவாயுவோடே அய்யம்வந்தெய்துமாகில்
பிறந்துநீர்பெ[illegible]ந்திடாது பிறவெள்ளைவீழ்ந்திடாது
எறிந்திடுத் தீயைப்போல இளைப்புடனிருமலுண்டாம்
மறிந்திடும்புகைச்சல்காணும் வலித்திடுமேகந்தானே. ருரு

வலித்திடும்வாதந்தானும் வளரய்யம்பித்தந்தானும்
மெலித்திடுமகத்தாமேகம் மொழுகிடுஞ்சாந்தான்மாறி
சலித்திடுந்தாகமீறுஞ்சாப்பிட்டாலுடனேகாந்தும்
வலித்திடும்வரல்நீரோடுமழுங்கிவாயினிக்கும்பாரே. ருசா

இனித்திடும்வாதமேகத் தியல்புகல்லெண்ணைபோலும்
பனித்திடுங்கள்ளுபோலும் பதியில்நீர்போலதானும்
கனித்திடும்மேனியெல்லாம் காந்திடும்வெளுத்துப்போகும்
தனித்திடுமேகந்தானும் சாத்திரமையந்தானே. ருஎ

அய்யமும்பித்தமுந்தா னணைந்திடுங்காலந்தன்னில்
கொய்யுறுரெத்தந்தானும் கொப்புளித்தோடுந்தண்டில்
மையுறுங்கண்ணினுட்கு மகோதரம்பெரும்பாடாகும்
தொய்யுறுமேகமுண்டாந் தொடர்ச்சியைமுறையாய்க்கேளே. ருஅ

முறைகேளுஒன்பதப்பா முயர்ச்சியால்வந்தவேகம்
துறைகேளுகொர்ப்பத்தாலுஞ்சூழ்கின்றமேகமொன்று
நிறையுத்தகூந்தல்நல்ல நாயகன்மோகத்தாலு
மறைபோற்றுங்கெற்பத்தாலும்வளர்ந்ததுமேகந்தானே. ருகூ

வளர்ந்திடுஞ்செற்பத்தாலு மருவியமேகமஞ்ச
மூளந்திடுதந்தியாகு முள்ளத்தில்மேகந்தானே
யளந்திடும்வெள்ளைகொட்டுமாகாதமாமேகந்தான்
தளர்ந்திடுமத்திபீறித்தணலெழும்புருக்கிமாமே. ௬௰

தணல்போலகாயுமேகந் தண்ணீர்தான்பகையாமேகம்
முணக்கவேமுழுகுமாறில் முருக்குமாமேகந்தானும்
பிணக்கவேபசிதான்கேட்ட பேரொழுமேகந்தானும்
வணக்கவேசையோகத்தை வர்ச்சிக்குமேகமாமே. ௬௧

ஆமப்பாகடுவஸ்துண்டா லாகியமேகம்பின்னும்
போமப்பாபாஷாணத்தா லுற்றிடுஞ்சிலமேகங்கள்
நாமப்பாசொன்னேமிந்த நாடியாஞ்சூத்திரந்தன்னில்
ஓமப்பாவிதுதானேழு மஞ்சமுன்னொன்பதாமே. ௬௨

குன்மவரலாறு

ஆகியமேகந்தானு மப்பனேயிருபத்தொன்று
மேவியகுன்மந்தானுமெழுந்ததோர்விதங்கள்சொல்வோம்
பாகியபித்தத்தோடு வாதமும்பரிந்துசேரில்
வாகியவாய்நீரூறும் வாந்தியும்மாகும்பாரே. ௬௩

பாரப்பாவாய்வுவாதம் பரிவுடன்அபானத்தோங்கில்
ஓரப்பாகும்பிதன்னி லுருண்டுதான்மிகவேநோகும்
கோரப்பாநெஞ்சில்குத்துங் குடலையுமுருக்கிக்கொண்டு
வாரப்பாவலிக்குமெத்த வாதமாய்வழங்கும்வாய்வே. ௬௪

வழங்கிய அப்புவோடுவாதமுமொன்றேயானால்
தழங்கியஅன்னசாரம் சந்திக்கவொட்டாதப்பா
புழங்கியகிதானந்தப்பிப்பிடியன்னமேறில்குத்து
முழங்கியமுறுக்குமேரில் உயிரையும்வதைக்கும்பாரே. ௬௫

வதையுறுவாயுவோடு மேகமுமருவுமாகில்
பதையுறுமலஞ்சலங்கள் பரிவுடன்கட்டிக்கொள்ளு
மதையுறுமிடதுபக்க மைந்தனேவலதுபக்கம்
பறையுறுமுறுக்கிக்குத்தும் பெருஞ்சூலைகுன்மமாமே. ௬௬

சூலைவருவாறு

குன்மமோரிருதானுலில்கூறிலண்விதமும்பாரு
வன்னமாம்நோய்கட்கெல்லா மகாநோய்தான்பொல்லாதாகும்

கன்மமாஞ்சடத்துக்கெல்லாங் காணுங்காணிந்தரோகம்
நன்மையாந்தன்மத்தோர்க்கு நடந்தாலும்காடிடாதே. ௬௭

நாட்டியபித்தசூலை நடந்தியவுரவைக்கேளும்
ஊட்டியவன்னமுண்ண ருசிதப்பிவாந்தியாகும்
மாட்டியகைகால்சத்து வகையுந்தன்மேலும்நோகு
நீட்டியவங்கங்கேதான் நின்றெரிந்தூறுங்காணே. ௬௮

காணப்பாவாதசூலை காட்டுந்தன்குறியேதென்னில்
காணப்பாகைகால்சந்து குளச்செல்லாங்கடுத்துநோகுங்
காணப்பாவயிறுவிம்மிக் கனத்துடன்சுரப்புங்காணுங்
காணப்பாதேகமெத்த கனத்திடுமிளைப்பதன்றே. ௬௯

இளைத்திடும்வாதசூலைக் கெய்தியகுணங்கள்சொல்வோம்
குளைத்திடுகைகால்நெஞ்சு குத்துடன்வரண்டிருக்கும்
தளைத்திடுமார்பில்சென்று தாக்கிமேலேறிவெட்டு
மளைத்திடுஞ்சீய்தான்கக்கும் ஆகாதவையுமாமே ௭௰

ஆகாதவாதபித்த மணைந்திடுஞ்சூலைகேளு
வாகானகால்கள்கையில் வளமுடன்காடுகட்டுந்
தாகானமேனியெல்லாந் தடிப்புடன்வெடிப்புண்ணாகி
போகாதஅசாத்தியமாகிப் புணர்ச்சியால்கொல்லுந்தானே. ௭௧

கொல்லியவையத்தோடுபித்தமுங்கூடித்தானால்
வல்லியம்போலக்குத்துமைந்தனேஎலும்புதோறும்
மெல்லியசரீரம்நோகும்வரிசையாய்சுரமுங்காணும்
மெல்லியதனுந்தான்வற்றும் விடங்கட்குமிருமுந்தானே. ௭௨

தானென்றவையத்தோடுசம்வாதசூலைகேளு
ஊனென்றசடந்தானேகும்ருசிதப்பும்பாலாம்புண்ணும்
கானென்றகாலிலாணிஎலும்பெலாங்கறுத்துக்கேட்டு
கோனென்றகழிச்சல்வாய்காக்குளிர்சுரமாறலாகி
மானென்றதாதுநட்டம்தறுசூலையாறும்பாரே. ௭௩

ஆறுகுஞ்சூலையப்பா அதிலொன்றில்மூன்றுகுலை
வேறுகும்பதினெட்டாகும் வெவ்வேறுசூலையில்லை
கூறுகவிதனலப்பா குணங்கள்தான்கோடியாகும்
பேறுகமிவர்கள்பேரைப்பிரித்துரைபாய்வோம்பாரே. ௭௪

பாரப்பாகெர்ப்பகாரம்பரிவுடன்வாய்வுதெய்வு
சேரப்பாபுந்தியோடு சென்றிடிற்கருத்தாண்மாளும்
வாரப்பாபுழுத்தானுண்ணில் மலடெனச்சொல்வாரப்பா
ஆரப்பாவிதனைப்போக்கில் ஆண்பிள்ளைசெனிக்குந்தானே. எ௫

செனிக்கின்றகுழவிதானுந் திடத்துடன்பிறக்கும்போது
கனிக்கின்றசீய்நீர்போலே கலந்துள்ளேகட்டிநிற்கும்
புனிக்கிறவிடுப்புக்கைகால் பரவியேநொந்துகுத்தும்
தனிக்கின்றபசிதாம்போகும் தடித்திடுமுகம்பாரே. எ௬

பாரியவாய்வுதானும் பரிவுடன்குழிதான்சேரில்
ஆரியகழிச்சலாகிச் சதாநித்தமுறுமிச்சாடும்
வாரியதேகமெல்லாம் வலியெழுநிடைதானோகும்
நாரியனெனக்குச்சொன்ன ஞயந்தவர்சித்தர்தானே. எஎ

தானென்றகெர்ப்பத்தோடு தரித்திடுஞ்சோனைகட்டில்
வானென்றமத்துப்போல வாயுவுமுருளும்பாரு
ஊனென்றபசிதான்போகு முளைந்துதானிறைச்சலுண்டாம்
மானென்றகழிச்சல்மீறும் வருஞ்சூதவாயுவாமே. எஅ

சூதானகொப்பகாலஞ் சுற்றியேவிச்சுகொளளில்
வாதானமேகமீறி வழுவகியேசெனிப்பிக்குங்காண்
போதானவுடம்பதெல்லாம் புண்போலேமிகவும்நோகும்
நீதானமயக்கமாகி நிற்சிவனைகுந்தானே. எ௯

ஆகின்றவாறுசூலெகெர்ப்பத்திலடர்ந்தநோய்காண்
பாகின்றவைதான் சூழில்பலித்திடாக்கருவுமப்பா
வாகின்றஇதுதான்போக்கில்மலடிதான்பெருவாள்பிள்ளை
யாகின்றநோய்கட்கெல்லாமறைந்திடுமுறைபாடாமே. அ௰

கெர்ப்பசன்னி.

முறையானகெர்ப்பந்தன்னில் முயன்றதோர்சன்னிகேளு
உறையானசீய்நீர்க்குள்ளேயுறைந்திடில்வாய்வுமீறில்
இறையானதேகம்வேர்க்கும்மெய்யெல்லாமயக்கமாகும்
துறையானமலந்தான்கட்டுஞ் சோயிக்குந்துணிந்துபாரே. அக

பாரப்பாமாதர்க்கெல்லாம் பச்சுடம்பாகுங்காலம்
தாரப்பாவனுபோகிப்பள் தணிபழங்காடியுண்பாள்
ஆரப்பாமாங்காய்தின்பா ளப்பனேமாவுதின்பாள்
சேரப்பாசன்னியெய்துங் கொண்டிடுஞ்சன்னிகேளு. அஉ

கொண்டிமேலடிக்கப்பா கூடிடுமெட்டுசன்னி
வண்டிதான்ருதுகாலத்தில் மாதின்பாள்மோர்கானுண்பாள்
தண்டியேயன்னையாள்பின்னுந் தனிச்சூதக்காயுந்தின்பாள்
ஒண்டியேபெண்களுக்கு ஓரெட்டுச்சன்னியாமே. அரு

ஓரெட்டுச்சன்னியப்பா யுற்றதோர்பெண்களுக்கு
வாரெட்டுப்புருஷனுக்கு மகத்தானசுகசன்னிதான்
நேரிட்டுப்பார்க்கும்போது நெகிழ்ந்தனுவெவ்வேவருதும்
புரெட்டுமெச்சவேதான் பகர்ந்திடுங்கண்ணோய்கேளே. அசு

கண்ணோய்வகைவகை.

கேளப்பாபொடிச்சூடாலுங் கிளர்வெய்யிலதுகாய்ந்தாலும்
வாளப்பாமின்னார்தம்மை மருவியேநித்தநித்தம்
காளப்பாமுழுக்கிலாதல் கண்ணினுல்கனல்தான்பார்த்தால்
தாளப்பாபாஷாணத்தால் தானெழுங்கண்ணோய்பாரே. அரு

கண்ணினோய்தானுண்டாகுங் காரணமின்னஞ்சொல்வோம்
பண்ணணமேகத்தாலும் பகர்வெட்டைவாயுவாலும்
தண்ணாயப்புவாலும் தனிமலக்கட்டினாலும்
புண்ணணவிரணத்தாலும் பொருந்தினகாரத்தாலே. அசு

காரமாஞ்சாரத்தாலுங் கடுரசந்தூமத்தாலும்
நீரமாஞ்சரக்குகட்ட நிலையுறுபுகையினாலும்
காரொத்தபேதியாலும் பலபலதண்ணீராலும்
வீரமாமிவற்றில்கண்ணில் செழித்திடும்வியாதிதானே. அஎ

குஷ்டவகை.

வியாதிகள்மூவருக்கும் விளங்கியகுட்டங்கேளு
சுயாதியாமேகத்தாலும் சூழ்கின்றகிரந்தியாலும்
பயாதியமாறதாகும் பலவண்டினாலேயெட்டாம்
பயாதியாபுழுவானாலு மய்யமாம்பதினெட்டாமே. அஅ

ஆமப்பாநோய்கட்கெல்லா மரசுதான்மூன்றுநாடி
காமப்பால்வளர்ந்தெந்நாளுங் கருவியேகலந்துசேர்ந்து
வேமப்பாவெந்துநீரி விடமெல்லாம்விளந்துபின்னுஞ்
சாமப்பாபிறக்குமந்தத் தாதுவின்விளக்கங்காணே. அகூ

காணப்பாநாடிச்சொன்னேன் கலந்திடுங்கருவுஞ்சொன்னேன்
கொணப்பாநோயுஞ்சொன்னேன் குட்சமும்வகுத்துச்சொன்னேன்

பூணப்பாயவத்தைச்செய்யும் பூட்டையும்விரித்துச்சொன்னேன்
வீணப்பாசொல்லவில்லை விதிமுறைவணங்கிக்கேளே. ௬௰

கேட்டிடும்நாடிபத்தில் கெடிபெழுநாடிகள்ளி
நாட்டிடுநாடிமூன்றில் நபம்பமிடைபேவாதம்
மாட்டிடும்பின்கலைதாபித்த மய்யதுசுழிதானுகும்
வாட்டிடுமவமேவாத மருவிடும்பித்தநீரே. ௬௧

பித்துற்றஅய்யம்விந்து பிரிந்தநற்பூதங்கேளு
உத்தநல்வாதம்வாய்வு ஓங்கியேபித்தந்தேய்வு
சுத்துற்றஅய்யந்தண்ணீர் சோர்வில்லைபின்னவாதம்
பத்துற்றபிராணன்பித்தம்பகைவுறுசபானனேயே. ௬௨

அய்யமாநாடிமூன்று லழிக்கவுமாக்கலாகும்
நய்யமேயொன்றில்மூன்று நாடியாம்நல்லதாகி
மையுறுங்கருவிக்கெல்லாம் வாசல்காப்பவரேயாகிச்
செய்யுறுதொழில்கட்கெல்லாஞ் சிந்துகன்சித்துமாமே ௬௩

ஆம்ப்பாவெழுபத்திரா யிரநாடிபத்தில்மூன்றும்
சோமப்பாவந்திக்கீழே சுழிதனைப்பற்றிநிற்கும்
காமப்பாவினைத்தெந்நாளுங் கருவியவத்துப்பின்னும்
சாமப்பாவிளைக்குமந்தத் தாதுவின்வழக்கங்காணே ௬௪

வளர்ந்திடுதாதுதன்னை வகையதில்துகையேசொன்னேன்
வளர்ந்திடும்வியாதிக்கெல்லாம் மணியொடுமருந்தைச்செப்ப
வளர்ந்திடும்சரக்குக்கெல்லாம் வகைவகைசுத்திக்கேளு
வளர்ந்திடும்நோய்களெல்லா மருந்திலொழியுங்காணே. ௬௫

வேறு-ரசசுத்தி.

காணப்பாரசுதமொருபலந்தான்வாங்கிக் கல்வத்திலமர்த்தியேமஞ்சள்தூளால்,தோணப்பாமத்தித்துஒட்டடைவின்தூளுஞ்சுகமானவெற்றிலையின்சாறுவிட்டு, ஊணப்பாதனித்தனியேகடிகைமூன்றுஉறத்தோய்ந்துத்திரும்பவதைமூரப்போட்டு, பூணப்பாதாழைநீர்மலாக்காய்நீரும் புகழானசெம்பரத்தம்பூவின்சாரே ௬௬

சாருகும்வெற்றிலையின் பாகல்கிழங்குந்தன் தாறுமையங்கோலச்சாறுங்கூட, மாருமலம்மான்பச்சரிசிச்சாறும் வாய்வுருசாரணைச்சாறுரசம்பட்டைச்சாறுங், கூருகுங்கொன்றையுட பட்டைச்சாறுகோத்தேரேட்டும்மூன்று கடிகைமத்தி, வாருகவிப்படியேமத்திச்சாக்கால் வாலைபோற்பிரகாசம்வருந்தான்பாரே. ௬௭

திராவியசுத்தி.

பாரப்பாஒருபத்தைந்துசுத்தி பாடுகிறேன்திரிகடுகுதிருபலையுமிக்க, சீரப்பாமரமஞ்சள்கற்கண்டுசக்கரையும் சீரானசம்பழமுமுந்திரிகையுடனே, போரப்பாகொம்முட்டிபொன்முசுட்டையுநாரிபுளியாரைசெருடுவேலிமணத்தக்காளி, நீரப்பாகற்றுழை வாய்விளங்கம்கெந்திசேர்த்தகருஞ்சீரகமுங்கோஷ்டந்தானே. ௯அ

கோஷ்டமொடு நாயுருவியிருபத்தைந்துங் கூருணநீர்கொண்டுங்கியாழுங்கொண்டும், ஆட்டமுன்மத்தித்துக்கடிகைமூன்று அப்பனேவெவ்வேறேசெய்தாயானல், ஊட்டலாங்குளிகை அவிழ்தத்துக்கெல்லாம், உத்தமனேவேதையாம்நோயுந்திரும், பாட்டெல்லாஞ்சூதத்தாலல்லோசித்தர் பாடினர்நூல்தோறும்பாடினரே. ௯௯

கெந்தகசுத்தி.

பாடியதோர்கெந்திக்குச்சுத்தியென்ன பசுவிநெய்யிலிட்டுருக்கிப்பாலில்சாய்ப்பாய், ஆடினதோர்சுத்தியப்பா அவிழ்தத்துக்காகும் அப்படியேயேழுதரமுருக்கிச்சாய்ப்பாய், நாடினதோர்மனேசிலையின்சுத்திசொல்வோம் நறுக்குவாய்பணம்போலேகண்ருய்நீதான், மூடினதோர்கிழிகட்டியாட்டுநீரில் மூதிரவேதோளாங்கிரமெரித்துவாங்கே.

மனேசிலைசுத்தி.

எடுத்திடுவாயுளுந்து வெந்ததண்ணீரிலிட்டு எரித்திடுவாய்மனேசிலைதான்சுத்தியாச்சு, மறித்திடுவோரில்லையப்பா துறைக்கெல்லாமாகும்மகத்தானதானகத்தின்சுத்திகேளு, பரித்திடுவாய்பணம்போலேதாளகத்தைவெட்டி பருஞ்சிலைகனேமுடிந்துகிழிதான்தட்டி, அரித்திடுவாய்தோளந்திறங்கோமயத்திலும் அப்பனேகாடியாலவித்திடாயே ௱௧

தாளகசுத்தி.

அவித்திடுவாய்சுண்ணாநீர் பூசினிக்காய்நீரில் ஆவின்பால்ரசம்பட்டைக்கியாழத்தாலும், அவித்திடுவாய்மூன்றுதின மூறப்போட்டு அரகராவெடுத்திடவேசுத்தியாகும், அவித்திடவேசாதிலிங்கஞ்சுத்திகேளு அப்பனேகுப்பிவைப்பைநொறுக்கிக்கட்டி, அவித்திடுவாய் பழச்சாற்றில் மூலைப்பால்தன்னில் அடைவாக விருசாம மூறப்போடே. ௱௨

லிங்கசுத்தி.

ஊறவேலிங்கமதுசுத்தியாகும் ஊட்டுவாய்துறைக்கெல்லா மூ
றைத்துப்போகும், சீறிநின்றநாகசுத்திதன்னைக்கேளு செப்பரியவெ
ண்ணையாம்பாலுமாகு, மீறவேமோராகுங்காடிநீராம் வெண்மாட்டு
க்கோமயமாம் பழச்சாறாகும், வீறவேயெருக்கம்பா லிவைகள்தன்
னில்வெந்துருகிச்சாய்த்திடவேசுத்தியாமே. ௰௩

நாகசுத்தி.

சுத்தியென்ற நாகம்பாமணிக்கட்டாகுஞ் சூதத்துக்காகுந்து
ரிற்றுக்காகுஞ், சித்தியென்றசெந்தூரமருந்துக்காகுஞ்சித்தரெல்லா
ஞ்சுத்திதன்னைத் திரிந்தாரில்லைப், பத்தியுடனிருவங்கமிப்படித்தா
னெருக்கிப்பாங்காகச்சாயப்பார்சுத்தியாகும், வெற்றியுறும்வெள்ளை
க்குச் சுத்திசொல்வேன் வெட்டடாபணம்போலே பொடியாய்த்
தானே. ௰௪

பாஷாணசுத்தி.

தானென்றபொடியதனைகிழிபோய்கட்டி தனைச்சுண்ண நீருள்
ளேதோளாந்திரமாட்டு, தேனென்ற ஆவின்பால் சாணிப்பாலர்ல்தி
றவாமல்மூடியதையெரித்துவாங்கு, வானென்றபார்ஷாணம்சுத்தியா
கும்மாட்டுவாய்துறைக்கெல்லாம் சித்தியாகுந், தேனென்றஎலிவிஷ
த்தின்சுத்திகேளுசிறுகீரை யாவின்பால்காணச்சாறே. ௰௫

எலிவிஷசுத்தி-நாவிசுத்தி.

சாறுகளில்தோளாந்திரமாகவாட்டித் தயவர்கவெடுத்திடவே
சுத்தியாச்சு, வெறுகுநாவியுடசுத்திசொல்வேன் வெண்பருத்தியிலே
சாற்றிலிருசாமம்போட்டு, மீறுமல்கோமயத்திலிப்படியேசெய்து மீ
ண்டுமதையேரண்டயிலையில்சுற்றி, மாறுமலிலைவாட்டி யெடுத்துக்
கொண்டு மைந்தனேதுறைக்கெல்லாமாட்டுமாட்டே. ௰௬

மாட்டுவாய்சீந்தியுடகியாழத்திட்டு மருவியதைத்தோளாந்திர
மெரித்துவாங்கி, ஊட்டுவாய்கோமயத்தால்கழுக்கச்சுத்தி யுற்றெரு
க்கப்பாலிலேயூறப்போட்டு, கோட்டுவாய்கோப்பாலிற்கழுவச்சுத்தி
குற்றமறும்நாவிசுத்திகூர்ந்துகேளு, ஆட்டுகிறஅயப்பொடியில்சுத்
தன்னை அறையுகிறேனன்றாக அறையுறேனே. ௰௭

அயப்பொடிசுத்தி.

அறையுறேன் அயகிண்ணமொன்றுவாங்கி அப்பனேயெள்
ளெண்ணெயதற்குள்விட்டு, குறையாமலொருசாமம்வறுத்துநான்று

காடிவிட்டுக்கழுவச்சுத்தி, முறையாகக்கருவேலம் பட்டைச்சாற்றில் முசியாமலிருசாமமேவகவைத்து, நிறையாகக்காடியிலேகழுவிப்போட்டு நீட்டுவாயிந்தசுத்திநித்தம்போக்கே. ௱௮

அப்பிரகசுத்தி.

போக்காக அப்பிரகசுத்திதன்னைப்பூட்டுகிறேன் அப்பிரகம்படி தானொன்று, வாக்காகக்கோமயந்தான்படிதான்மூன்று வகைக்கொண்டுசமனாகவேர்விளைவத்து, வீக்குவாய்ரெண்டுபடிநீர்தான்வற்றவெந்த பின்கன்னைப்புள்ளநெல்லிச்சேர்ந்து, தாக்கியேகிழிகட்டிப் புளித்தகாடிதனில்விட்டுக் கசக்கிடவேகளையும்பாரே. ௱௯

தாம்பிரசுத்தி.

களர்த்தக்காடியெல்லாந் தெளியவைத்துக் கலங்காமலிருத்தப்பாஉலரவைத்து, விளைத்தவொருசெந்தூரம்பற்பம்பண்ணுதிலத் நக்கநோய்களெல்லாம் நீறாய்ப்போகும், கரைக்குளொளிதாம்பிரத்தின்சுத்திகேளு சல்லிப்போல்தாம்பிரத்தைதறுக்கிவாங்கி, நிரைத்திடுவாய்புளித்தமோர்காணச்சாற்றில் நீயேழுதரங்காச்சித் துவைத்திடாயே. ௱௰

காந்தசுத்தி.

துவைத்திடுவாயேழுதர மெருக்கம்பாலில் சொல்லுகிறேன்சல்லென்னோகோமயத்தில், அவைத்திடுவாய் பழச்சாற்றிலாவின்பாலில் சுருக்கானகற்றாழைபொன்னாங்காணி, துவைத்திடுவாயிதனிலேகாச்சிக்காச்சிச் சுத்தியாக்காம்பிரத்தைக்குட்டுக்குட்டு, அவைத்திட்டவேகாந்தசுத்திகுட்டக்கேன்றுசிபற்றுங்காந்தத்தைத் தண்டாய் வெட்டே. ௱௰௧

நிமிளைசுத்தி.

வெட்டியதோர் காந்தத்தில்கம்பிரச்சாறு வெருகளைக்காடியுடன்புளித்தமோரில், கொட்டிவொய்மூன்றுதினம்வற்ற சுட்டாததுறைக்கெல்லாம்லோகத்தோடும், மட்டில்லைகாயசித்தி யோகசித்தியப்பனேநிமிளைசுத்தி அறையக்கேளு, வட்டியுறுநால்வகையு மொறுக்கிக்கொண்டு வாழையுடகிழங்குநீர்வாங்குவாங்கே ௱௰௨

துத்தசுத்தி.

வாங்கியேநிமிளையிட்டெரித்துமைத்தா ணைத்திட்வேசுத்தியாம்பக்கமில்லை, பாங்கியாந்துத்தத்தின் சுத்திகுட்டப் பணம்போலே

பொருங்கியவைதக்கிழியாய்க்கட்டி, ஆங்கியாம்அமுரியிலேமூசாம மா
விளுடநீர்தனிலேயிரண்டுசாமம், நெக்கியவைதத்தோளாந்திரமெரித்
துவாங்கு சித்திபெறச்சுத்தியாம்லோகத்தாட்டே ௱௰௫

குக்கல்சுத்தி.

ஊட்டவுந்தான்குக்கில்தன்னைச்சுத்திசெய்ய உத்தமனேயிடித்
ததனைக்கிழிதான்கட்டி, மூட்டுவாய்திரிபலையுந்தேவதாரம் முதிர்ந்து
நின்றபேய்ப்புடலின்கியாழம்பண்ணி, ஆட்டுவாய்தோளாந்திரம் நா
லுசாமம்அதின்பிறகுபேய்ப்புடலின்பத்திரிகூடக், காட்டுவாய்நிம்ப
த்தோல்கியாழம்வாங்கிகாச்சடாகுக்கிலுடகளங்கம்போமே. ௱௰௬

தொட்டிசுத்தி.

களங்கம்போல் ஆவின்பால்நாலுசாமம் காச்சிடவேசுத்தியாம்
கலருஞ்சித்தி, களங்கம்போம் தொட்டிக்குச்சுத்திசொல்லில் கட்டிக
ளைநொறுக்கியவைதகல்வத்திட்டுக், களங்கமாம்நெய்தேனுஞ் சரியா
ய்சேர்த்துகலக்கியேயூறவைப்பா எட்டுநாள்தான், களங்கறவுந்தோ
ளாந்திரங்காணச்சாற்றில் காச்சடாதொட்டியங்கேசுத்தியாச்சே.

கற்பூரசிலாசுத்தி.

ஆச்சப்பா கற்பூரச் சிலையைவாங்கி அடைவாகநொறுக்கியதை
கிழிகட்டிவைத்து, பாச்சப்பா ஆவின்பால் தோளாந்திரமாகப் பால்வ
ற்றுமட்டுமங்கே எரித்துப்பின்னுங், காச்சப்பா அயக்கிண்ணிக் குள்
ளேவைத்துக் கடியதொரு அல்லியுடநீரிலாட்டு, மூச்சப்பாசகாசத்து
ச்சுத்தியாதியாச்சுமூட்டுவாய் துறைக்கெல்லாம்மூட்டுமூட்டே. ()

நேர்வாளசுத்தி.

மூட்டவேநேர்வாளஞ்சுத்திகேளு முழுமேதிச்சாணியிலே வா
ளம்போட்டு, ஆட்டுவாய்கமலாக்கினியாலேயப்பா ஆறவிட்டுஎடுத்த
தனைத்தோடுபோக்கி, மூட்டுவாய்குற்றமறுஞ்சுத்தியாகு முறவாகு
ஞ்சரக்கோடுஊட்டுப்பக்தாம், நீட்டியேசுத்திவகைமெத்தவுண்டு நி
னைவுகொண்டுஇவ்வளவுஞ்சொன்னேன்பாரே. ௱௰௭

லோகமாரணம்.

பாரப்பாலோகமாரணங்கள்சொல்வோம் பரப்பிலேவிடுகாதே
யட்க்கியாடு, ஆரப்பாவகையாகச்சொன்னோரேது அடைவாக சொ
ல்லுகிறேன் அடக்கமுவிட்டு, நேரப்பாவெள்ளியந் தாளகத்தால்ம

ளும்நிலையாதகாரியம் மனோசிலையால்மாளும்; காரப்பாவுருக்கதுவும் லிங்கத்தால்மாளுங் கடியசெங்கிராம்பிறத்தைக்கவ்வுந்தானே. ()

கவ்வுமடாவெள்ளிதன்னை மாட்சிகமுண்ணுங் களங்கமில்லாப் பொன்னதனைசிமிளையுண்ணும், கவ்வுமடாலோகங்கள்தகடுதட்டிக் காட்டுவாய்தகட்டுக்குச்சாக்குநோய்க், கவ்வவேசம்ராயீச் சாருவிட் டுக்களங்கமறஆட்டியேநகட்டில்பூசு, சவ்வவேசட்டிக்குள்தகட்டை வைத்து கவிழ்த்தியேயோடுகொண்டுமூடுமூடே. ௱௰௯

மூட்டியேசக்துவாய்சீலைசெய்து முதிரவதைக்கெசபுடம்போடு போடு, நீட்டிபிடுலோகங்கள்வெவ்வேறாக நீட்டியேபுடம்போடு வ ன்னமேறும், ஆட்டிநின்றகாந்தத்தைச்செந்தூரிக்க அறைகிறேன்சு த்திசெய்தகாந்தத்தைவாங்கி, நாட்டியொருசட்டிக்குள் காந்தமிட்டு நலமாகமேல்கட்டிகவிழ்த்துமூடே. ௱௨௰

காந்தசெந்தூரம்.

கவிழ்த்தியபின்குழிவெட்டிமூன்றுபத்துக் கனத்தெருவைகுழி க்குள்ளேயடக்கியந்த, கவிழ்த்திவைத்தசட்டிதனை யெருமேல்வைத் துக், கட்டாகமுப்பதெருமேலேமூடி, கவிழ்த்தியனலாட்டியேயெரி த்துவாங்கு கனலாறிகாந்தத்தைவாங்கிமைந்தா, கவிழ்த்திநீதோர் ப்ச்சரிசிக்கழுநீரோடு கருவாழைகிழங்கி னுடசாறுவாங்கே. ௱௨௧

வங்கப்பாஆவாரஞ்சாரிளநீர்ச்சாறும் வகைநாளுஞ்சமனாக அ ளந்துநீயும், வாங்கடாதினமிரண்டுஆட்டுச்சாற்றால் வட்டுப்போல்பி டித்ததனை ஆறவைத்து, வாங்கடாசட்டிக்குள்ளதையைவைத்துமறு சட்டியால்தனைமறைத்துமூடி, வாங்கடாசீலைசெய்து கசபுடத்திற் போடுவாராக ஆறியபின்னெடுத்திடாயே. ௱௨௨

எடுத்ததொருவில்லைதனைக் குமரிவேர்நீரி லிரக்கியதையாட்டி யேகெசபுடம்போடு, எடுத்திடுவாயாறினபின் காரைவேர்மாமபட் டை இலவுக்கப்பட்டையுடநெல்லிமுள்ளி,யெடுத்திடித்துயிலைசம னாய்கியாழம்வைத்து, இயல்பாகயாட்டியதைசட்டிக்குள்ளிட்டு எடு த்திட்டேமுன்போலசீலைசெய்து, இதயாகமுன்போலே புடத்தைப் போடே. ௱௨௩

புடம்போடுஇப்படித்தானவுலையாட்டிபோனபழச்சாற்றில்மூ ன்றுவாட்டி, புடம்போடுபெருக்கியிலைச்சாற்றினாலும் பிசகாமல்ஆல் விழுதின்சாற்றினாலும், புடம்போடுமூன்றுதினம்பகரக்கேளுயிறகுநீ நெல்லிமுள்ளிச்சாற்றாலாட்டிப், புடம்போடுமேசிலந்தா தினத்த துபோகும் போனகாந்தசித்திதிறந்ததென்றே. ௱௨௪

லோகசெந்தூரம்.

நன்றாகலோகசெந்தூரஞ்சொல்வோமே நட்பாகலோகமோர் பலந்தான்மூன்று, குன்றாச்சூதமொரு பலந்தான்வாங்கு கொடுகெந்திரெண்டுபலந்தூக்குதூக்கு, நன்றாச்சூதமுடன்கெந்திரெண்டு முறவாட்டுகல்வத்திற்சமமதைரெண்டு, அன்றாகஇளவிபதமயனமாகும் தூளானலோகத்தையிதனிற்சேரே. ௱௨௫

சேர்த்தங்கேகுமரியுடசாறுவிட்டு சிதறாமலிநசாம ரட்டிவாங்கி, சேர்த்தங்கேயுண்டைபண்ணி ஆமணக்கிலையில் இடமாகவுளைந்தந்துஇலையால்மூடி, சேர்த்தேதானரவியில்வைப்பாய் சடிகையிருறு சென்றதன்பின் இச்சுட்டாப்போலேசுடாஞ், சேர்த்துநெலவிற்புதைத்திடுவாய் இனந்தான்மூன்று இருமபவதைத்தூளாக ஆட்டிவாங்கே. ௱௨௬

வாங்கினதோர்செந்தூரந் தங்கம்போலாம் மாரணத்திற்செந்தூரமாமுற்றப்பா, பாங்கான தங்கங்கள்லோகம்வெள்ளி பரிவானதாம்பிரங்கள்ஞவங்காரந்தங், தாங்கிநின்றமாரணத்தால் செந்தூரஞ்சித்திதாரணியில்வாய்திரந்துசாற்றவேண்டாம், தேங்காதமாரணத்திற்சித்திபாகுஞ்செய்யடாதுறைக்கெல்லாநதெளிந்துதானே. ௱௨௭

அப்பிரகசெந்தூரம்.

தெளிவானஅப்பிரகசெந்தூரஞ்சொல்வேன் சார்வாருமப்பிரகஞ்சுத்திசெய்து, வளிபாகுஞ்செம்பொன்னெரிஞ்சிலாட்டி மைந்தனேசாடிக்குள்ளடைபோலப்பி, தெளிபாமலப்பிரக மதன்மேல்வைத்து கோரகவடையதனைமேலும்வைத்து, அளிபாச்சட்டிகொண்டு கவிழ்த்துமூடி, அப்பனேகெசபுடந்தான்போடுபோடே. ௱௨௮

போட்டதொருஅப்பிரகம் இரும்பவாங்கி புகழாகக்கல்லுரலில் தூளாய்த்தான், ஆட்டியேவாங்கிமைந்தா மைபோலாட்டி அடைவாக்கியாமுந்தா லடைதான்தட்டி, நாட்டிவாய்மரப்பட்டைதேற்றாங்கொட்டை நயமாகப்பொடியாக்கிஒட்டிவிட்டு, மூட்டியேஅடையதனைஒட்டில்வைத்துமுன்போலேசீலைசெய்துமூடுமூடே. ௱௨௯

மூட்டியேபுடர்தீர்த்துதூளாயாட்டி முன்போலேமூன்றுதரங்கெசபுடந்தான்போடு, நீட்டியேநெல்லிமுள்ளிசாற்றாலாட்டி நீவே லிவாழையுட்கிழங்கின்சாறு, மூட்டியேகலந்தாட்டி அடைதான்செய்து வுறம்போட்டுமுன்போலபுடத்தில்நீயும், நாட்டியேயிப்படிதான் கெசபுடந்தான்போடு நயமாகவெந்தித்ததையாட்டு ஆட்டே. ௱௩௰

எடுத்திடுவாய் தூளதனைக் குமரிச்சாற்றா லிதமாக வாட்டியதை ய
டைதான்செய்து. தொடுத்திடுவாய மூன்றுபத்துப் புடந்தான்முன்
போல் சுகமாகஅப்பிரகம அருணன்போலாம், விடுத்திடுவாய்வியாதி
களையுண்ணவென்றால் வெண்ணபஞ்சில்பொதிபட்டால் போலப்போ
க்கும், கடுத்திடுமே ஆயித்துமங்கைகாணிணையுந்தள்ளுஞ் சதிராணசகத்
திரத்தெண்வியாதியாமே. ௱௩௧

மண்டூரச்செந்தூரம்.

வியாதிபோம்மண்டூரச்செந்தூரங்கொண்டால் மைந்தனேவை
க்கின்றவரிசைகேளு, காயதிபோய்ச்சகத்திரமாம் வருஷஞ்சென்ற
நத்தங்கள்கலில்கிடக்குங்கரியகிட்ட, மயாதிபோய்க்கொண்டு வந்த
தூளாயாட்டி அப்பனேநான்பிமரக்கரியினாலே, வியாதிபோயுலையி
லிட்டுச்சிவக்கவூதி நீலாவின்கோமயத்தாலூறப்போடே. ௱௩௨

ஊறியபின்பெடுத்தகனிலூறல்வாங்கும் உலர்த்தியதைத்தூளா
க்கிக்குகையிலூட்டு, மாறியதோர்மண்டூரஞ் சிவப்புமாச்சு மற்றும
தைச்செந்தூரமாக்கக்கேளு, ஊறுடனேமூன்றுநாள்நாகவல்லிச்சாற்
றால் வீரமுடன்கூட்டுவாய்வற்றவற்ற, வாறுகநொச்சிச்சார்வெள்
ளாட்டுப்பால்நீ மைந்தனேமூன்றுதினம் கொதிக்கவையே. ௱௩௩

வைப்பதுதானெப்படித்தானென்றுநீயும் வயணம்கேள்வெகு
வேறுதினந்தான்மூன்று, வைத்ததனைவத்திவிச்சுப் பின்புவாங்கிவரி
சைபெறவொருசாமங் குமரிச்சாற்றால், வைத்தாட்டி மடக்கிலிட்டு
மேலுங்கீழும் வைப்பதுதானுலிலைநான்மறைத்துச்சுற்றி, வைத்திடு
வாய்நிலமண்தான்வெண்டுசெய்துவராகபுடமறுபதுதான்போடே.

போட்டிடுவாய்மண்டூரச் செந்தூரமாச்சு போக்கதிலே வியாதி
களைப்பிடுங்கித்தினனும், மாட்டிடுமேமகோதரங்காமாலைபாண்டு வ
ருஞ்சோகைபெருவயிறுவலிமயக்கம், ஆட்டியதோர்களைமுதல் மே
கத்தானுமாக்கைவலிகிராணியிவையெல்லாந்தீரு, மூட்டிடவேயனு
பானமுணாக்கக்கேளு உத்தமனேவியாதிகண்டுவுரவுசேரே. ௧௩௫

உருக்குச்செந்தூரம்,

உறவுசேர்வுருக்கிலேசெந்தூரத்தை வுரைக்கிறேன் உளிபத்து
வாங்கிவந்து, உறவாகவுலையிலிட்டு அருணன்போல வூதியதையாவி
னீர்வெள்ளாட்டுநீரில், உறவாகச்சமன்கலந்துவைத்தாயானால்வுதிரு
மட்டாகநக்கதுவுந்தோய்க்கத்தோய்க்க,உறவாகவுதிர்ந்தபடிபொடியெ
ல்லாம்வாரி பூரவாட்டுக்கரிப்பாநீருட்டிக்காணே. ௧௩௬

காணப்பா ஆட்டியபதைவில்லேதட்டி காயவைத்துச் சட்டிக்குள் ளாவிலையைப்பரப்பி, பூரணப்பாவில்லதனையிலேமேலிட்டு புகழாகப்பி ன்னுமந்தயிலையால்மூடி, ஊணப்பாமேல்சட்டியிட்டுமூடி யுறவாகச் சீலைசெய்துவுலரவைத்து, தோணப்பாகெசபுடத்தி லாட்டிவாங்கிச் சொல்லுகிறேனந்தரத்தாமணையின்சாறே. கஙஎ

சாறுவிட்டு ஆட்டுநீகசபுடந்தான்போடு தனிக்குமரிச்சாற்றினு ல் கெசபுடந்தான்செய்து, கூறுடனேயெடுத்துப்பார் முருக்கம்பூப் போல் கொள்ளியதுசெந்தூரங்கொடியசித்து, மாறுபட்டநோய்களெ ல்லாந்திரிபலையுமெல்லம் வரிசையுடன்பொடிகூட்டி வைத்துகொ ண்டு, ஆறியதோர்செந்தூரம்பணந்தான்தூக்கி அப்பனேதேனிலே குழைத்துக்கொள்ளே, கஙஅ

கொள்ளவேதூவவுடல்சூட்சமாகும்குறைந்திருந்தசூட்சவுடல் மெய்யில்கொள்ள, மெள்ளவேபழுத்திருக்கும்மயனம்போல மீறவரு ங்கரைதிரைகள்வெருவியோடும், விள்ளவேநாவேதுபாவுமேது மே லோர்கள் அயங்கிட்டமொண்டுங்கொண்டார் அள்ளவேகுறையாது கடலிலேற்றம் அமிர்துநீலோகத்தையணைத்துஆடே. கஙகூ

அமிர்தசஞ்சீவிகுளிகை.

ஆட்வேயமிர்தசஞ் சீவிசொல்வோம் அப்பனேசூதமொன்று கெந்தியொன்று, நீட்வேகல்வத்தில்சாமமொன்று நீட்டிநீயாட்டை யிலேமயனமாகும், ஊட்டவேகருத்திருக்குமப்பிரகபற்ப முயர்ந்த லோகபற்பந்தாம்பிரபற்பம், காட்டவேதாளகமும் நாவிலிங்கம் நல மானமனேசிலையுங்கலந்குவிட்டம்பாரே. கசய

பாரப்பாபயத்தித்திப்பிலிபினேட்டே பாங்கான அதிவிடையம் சொன்னமாஞ்சி, சீரப்பாவிதுவெல்லாம்ரசகெந்தியுடனேசேர்சமனு யிஞ்சிச்சாறும்சிவதைச்சாறும், ஊரப்பாசிறுகீரை யிலைகட்டிமில் மாட்டியேயாட்டுவாய்தினந்தானொன்று, போரப்பாகஞ்சாவின்சாற் றினுலும் பொருந்தியேதினமொன்று புகட்டியாட்டே. கசக

ஆட்டப்பாபழச்சாற்றி லாரைச்சாற்றி லப்பனேயாரவைத்து க்குப்பிக்கேற்றி, மூட்டடாசீலைசெய்துதாழிக்குள்ளே முதிரவேம ணலிட்டுக்குப்பிவைத்து, நீட்டடாமேலுமந்தமணல்பரப்பி நினைவா கவிருசாமமெரித்துவாங்கு, மீட்டடாவாதியபின்தூளாயாட்டு மே லானமாத்திரைதான் செய்யக்கேளே. கசஉ

சூசிகாபரணம்.

கேளப்பாயிஞ்சிநீர்தன்னாலாட்டி கிருபையுடன்குன்றியிடைகுளிகைகட்டி, சூளப்பாதோஷமுதல்சன்னிக்கெல்லாம் சூட்டிடவேயஞ்சிநின்ற வுயிர்கள்மீளும், நாளப்பாசூசிகாப்பரணஞ்சொல்வோம் நாடியுயர்பதின்மூன்றுசன்னிதீரும், வாளப்பாசூதமொன்று காந்தமொன்று வாகானதாம்பிரமயலோகந்தானே. ௧௪௩

லோகமுடன் அப்பிரகமற்றும்நேராய் நொறுக்கியதைநேர்சமனாய்க்கெந்திகூட்டி, லோகமூறும்நொச்சிவேர்சித்திரமூலம் நறுக்கமுடன்சரியாக்கியொழும்வைத்து, லோகமூறும்பொடியிட்டுத் தினந்தான்மூன்று நோகவதையாட்டிநீவாங்கிப்பின்பு, லோகமூறும்நாயுருவிகரிப்பான்மந்தை நோயகலப்பேயத்தித்தக்காளிக்கானே. ௧௪௪

காணப்பாசித்திரப்பாலாடைகொட்டான் காந்தையொடுவெள்ளைக்காக்கணமுமிக்சப், பூணப்பாகையாகபழுபாகல்தன்னைப் புசழ்சீந்திசாரணையும்பேச்சுரைகளெல்லாம், தோளப்பாபேய்த்துளசி யிலைநீர்வாங்கி தோய்த்தந்தநீர்கவறாவியில்வைப்பாய், காணப்பாதினமொன்றுசாறதொன்று நயவாகவிரவியதைரவியில்போட்டே. ௧௪௫

போட்டபின்புபாகங்களின்னங்கேளு புகழ்கோழிமீன்மஞ்ஞையன்றிவெள்ளா, டாட்டதனின்பித்தசனில்வெவ்வேறூட்டியதில்லைத்துத்திப்பிலியின்கியாழத்தாலு, மூட்டவதைமூன்றுநாள் பாவனைதான்செய்து முசியவரைபெருக்கிலைவேர்கியாழத்தாலு, மாட்டியதைப்பாவனைதான்செய்துமைந்தா வதில்சமனாய்காவிதனைச் சமன்தான்சேரே, ௧௪௬

சேர்த்ததொருசூரணத்தைமுன்சொன்னபுடத்தில் திருப்பநீயூறவைத்தெடுத்துக்கொண்டு, சேர்த்திடுவாயனுபானம நோய்கள்சன்னி செயல்கண்டுமுறையுடனேசெய்துநீயும், சேர்த்திட்டேயமறுகுலைபெருவயிறுகுன்மங், கிராதபாண்டுவுடன்வலிதான்கூட்டஞ்சேர்த்திட்டவும்சயமுமிகுவாதத்தானுஞ்செல்லாதவீக்கமுடன்வரட்சிபோமே.

இரசபூபதி.

வரட்சிபோம்வெட்டைபோம்வலுக்குந்தேகம் மைந்தனேசஞ்சீவிமகத்தாஞ்சித்தி, யிறைச்சியொடுநரம்பெல்லாம்மிர்தமூறு மிரகமென்றபூபதியையியம்பக்கேளு, வரட்சிபோமமிர்தபற்பந் தாம்பிரபற்பம் வாங்காதகாவியிலைநேர்தான்தூக்கி, குறைச்சிட்டாக்கெந்திரெண்டுதிரிகடுகுதிரிபலையும் கூறுகவிவையெல்லாம்நொறுக்கிடாயே.

நொறுக்கியபின்கழுதாழை கண்டங்காரி நொச்சியடாபேய்த்துமட்டியிலைகளெல்லாம், நறுக்கியதோர்கொடிவேலி யாடுதின்னாப்பாலை நாட்டாகியாழமிட்டுவாங்கிமைந்தா, சிறுக்கடாயிருபதுநாளாட்டிவாங்கி சீறுனவுஞ்ஞர்தளவுகுளிகைகூட்டி, சுழுக்கான சன்னிகளுக்கீந்தாயானால்தொட்டவுடன்பதினமூன்றுந்தாள்நீறுமே. ௧௫௧

பஞ்சவக்திரவிதாம்.

நீறுமென்றபஞ்சவக்திரவிதஞ்சொல்வேன் நெருப்பானகாலாக்கினிருத்திரனைச்சொல்வேன், ஏறுமென்றாவிகெந்திவெண்காரஞ்சூதமியல்பானமிளகுடனேயிடைதானேராய், மாறுமெனறமத்தஞ்சாறதுகொண்டாட்டு வகையாகத்தினமொன்றுவழிக்கருட்டி, ஆறியேயுலர்த்தபின்புதூளாயாட்டியப்பனேசெப்பிலேயடைத்துவையே

காலாக்கினிருத்திரன்.

அடைத்ததொருபொடிகுன்றியிடைதான்தூக்கி ஆகாதசன்னிக்குள்வைத்தாயானால், உடைத்திடுமோர்பன்னிரண்டு சன்னிபின்புவோர்சன்னிவிரோதசன்னிவொன்றுகூடிச், றுடைத்திடுமோர்தோஷங்கள்பலவுந்தீருந் தருசானகாலாக்கினிருத்திரனுங்கேளு,படைத்தசத்திசாரமெலாச்சர்ரந்தானும் பாங்கானநவாச்சாரமிந்துப்பூவே.

இந்துவொடுபொட்டிலுப்பு வளையலுப்பு இயல்பானகாச்சப்புகல்லுப்பாதி, மைந்தனேசரிக்கட்டிகல்வத்திட்டுமாட்டியசிலோரிடைதான்சூதம்விட்டு,தொந்முறவோர்தினந்தான்மத்திந்துவாங்கிகுட்டவேமேல்மருந்தைத்துறையாய்நீயும், சிந்துவெனும்பெருங்காயங்கடுகாரத்தை சிலைபுங்கம்விந்துமிடைநேராயாட்டே. ௧௫௨

ஆட்டியதோர்மருந்துக்குள் சூதம்விட்டு யப்பனேமூடியதைத்தோவாந்திரமாக, வூட்டுவாய்பழங்காடிபாண்டத்திலிட்டு வறவாகத்தினமொன்றுயரைத்துவாங்கு, மாட்டுவாய்மத்தஞ்சார் நொச்சிச்சாறு வாகானகரிப்பான்சர்மணத்தக்காளி, கூட்டுவாய்பொன்மூசுட்டைகொடிவேலிபிஞ்சி குறுவெள்ளைக்காகணங்கொட்டான் சாரங்கைச்சாறே. ௧௫௩

சாறுகளிலொவ்வொருநாளாட்டிவாங்கி தனித்துயினி பாவனைக்குத்தூளாயாட்டி, வீறுபுகழ்மிளகதற்குநேராயாட்டிவிரவியதைமயில்பித்துவாகம்பித்து, மீறிவளர்மீன்பித்து வெள்ளாட்டின்பித்து வெவ்வேறேதினமொன்றுவிரவிநீயும்,வூறியபின்னிரண்டுகுன்றிவெல்லந்தேரி தூட்டாதயிருஞ்சோறுண்ணச்சொல்லே. ௧௫௪

உண்ணயிலேவெட்டைவந்துமேவித்தானு லுடன்தலையில்குளிர்ந்தசெலமுறவாய்சீயும், வுண்ணயிலேசன்னிபோந்தோஷம்போகும் உயிர்பறிக்குமட்டகுன்மம்கவுசிபோகு,முண்ணயிலேபெறுவயிருபாண்டுமாடு மோகோகோஇரிச்சனங்களாறுமோடும், உண்ணயிலேசாரமூறுங்காரமூறும் வுத்தமனேவேறுவணகயுரைக்கிறேனே. ௧௫௫

சன்னிவாதங்குசம்.

உரைக்கிறேன்சன்னிவாதங்குசத்தை யுத்தமனேசூதமொன்று கெந்தியொன்று, நிரைக்கிறேன் அரிதாரம்நாவிரஞ்சிகோரானபொன்மாட்சிகாபிரபற்பம், தரைக்குயர்ந்தபப்பிரகஞ்சதுதிசாரஞ் சங்கூமுடிசாரவெலாச்சாரந்தானும், பெரைக்குபருங்கடகசிங்கிபெருங்காயம்வசம்பு தேய்பபுடலும்பொன்முசுட்டைகடுக்காய்சுக்கே. ௧௫௬

சுக்குடனேகஞ்சாவும்நிலப்பனேயின்மூலந்துஞ்சாதநிம்பத்தின் பிசினுமகோராய்ப், பங்குவஞ்சேருற்றமாதாளிச்சாற்றுல பழச்சாற்றுல்தினமொன்றுவெவ்வேறுக, வுக்கிரமாயாட்டியேகடலைபோலேயுருட்டியேதசமூலகியாழந்தன்னில், தக்கதோரிஞ்சிச்சா றிவற்றிலாட்டிச் சாதகமாய்வியாதிபோம்வகையைக்கேளே. ௧௫௭

வடவானலாயம்.

வியாதியெனும்பதின்மூன்றுசன்னிதானும் விக்கலுறும்வாந்தியொடுவெட்டைதானும, வியாதியெனும்கரப்பன்முதல்புண்கள்தீரும், மேலானவடவானலரசத்தைக்கேளு, வியாதிபோம்சூதமொன்று கெந்தியொன்று மேலானவப்பிரகந் தாம்பிரபற்பம், வியாதிபோங்காந்தமாட்சிகந்தாரம் வீரூனநீலாஞ்சனமுந்தூக்கே. ௧௫௮

தூக்கடாகடல்நுரையுமிவைதானேராய் துடியானஇந்துப்புபொட்டிலுப்பு, தூக்கடாவெடியுப்புகாச்சுப்புதானும் சுகமானவட்டுப்புயஞ்சும்நேராய், தூக்கடாசதிர்க்கள்ளிப்பாலாலோர்நாள் துருசாகயாட்டியதைக்குகையிலிட்டுத், தூக்கியேகுளிகைக்குட்குகையைவைத்துச் சோர்வின்றிவாய்மூடியெருவடுக்கே ௧௫௯

அடுக்குவதுகுழிகீழுமேலுமப்பா யப்படியேகனபுடமாயோர்நாள்மூட்டும்,எடுத்திடுவாய்மறுநாளில் தூளாயாட்டியிருக்கமட்டுங்குன்றியிடையிஞ்சிச்சாற்றில், கொடுத்திடுவாய்மூன்றுதினம்பொடியைக்கேளு கூறுனதிப்பிலியின்பொடியைத்தூவிப் படுத்திடுமேதனுவாதமுகவாதசன்னி பாங்கானநடுவாதம்பாருங்காணே. ௧௬௦

பாரப்பாதள்ர்வாதம்வைத்துவாதம்பாவிநின்றதுடிவாதம்வி ஞ்குவாதம், பாருமப்பாசுழல்வாதம்பிரளிவாதம்படபடர்த்துமூர்ச்சி க்கும்படாராம்வாதம், மாருமப்பாவனுபான'கியாழங்கேளு பாங்கான வாமணக்குச்சிற்றுமூட்டி ,பாருமப்பாவேர்க்கொம்புவாதமுடக்கிவே றும் பட்சிக்கவிவையெல்லாம்பறக்குந்தானே. கசுக

சொர்னசாந்தவயிரவம்.

தானென்றசொர்னசாந்த வயிரவத்தைச்சொல்வோம் சார்வாக வெண்பதுவாதந்திரும், தானென்றசூதமொன்றுலோகமொன்று தா ளகமுந்தானொன்றுகிமிலேயொன்று, தானென்றகெந்தியொன்று நா வியொன்று தாம்பிரபற்பமொன்றுசித்திரமூலம், தானென்றவெண் காரம்நொச்சிவேறும் சமன்சேர்த்துக்கல்வத்திலபொடித்திடாயே.

பொடித்ததனைநொச்சிலேச்சாற்றாலாட்டிப் பொற்காரத்தைச்சார தனிலோர்நாள்மட்டும், மடித்தாட்டிக்குன்றிபிடை குளிகைகட்டி மைந்தனேயிஞ்சிச்சார் பின்னுங்கேளு, படித்தரமாய்க்கியாழமப்பா திப்பிலியின்மூலம் பாங்கானசூரணத்தைப்பகருவோம்நாம், நடித்து டையசிந்திசர்க்கரையரத்தை நயமாணகிம்பரமாப்பட்டைபாரே. ()

பாரப்பாஆமணக்கம்பருப்புத்தானும் பருஞ்சுக்குநொச்சியிலே தேவதாரம், நேரப்பாதூளாக்கியதறகுநேராய் நிறுத்திடுவாய்சுத்தி செய்தகுக்கில்சேர்த்து, ஆரப்பாநெய்யிலிட்டுயாட்டிக்கொண்டு அனு பானஞ்சாறுகளிலறிந்தூட்டு, போரப்பாவாதத்தைப் பிடுங்கித்தி ன்னும் புகழானவயிரவன்போக்குத்தானே. கசுச

இராசமிருகாங்குசம்.

போக்குமிகுராசமிருகாங்குசத்தைச்சொல்வோம் புகழானசொ ர்னபற்பந்தாம்பிரபற்பம், போக்குமிகச்சூதமிவை சரியாய்ச்சேரு பொன்தாரமிவையிரண்டுகெந்திரெண்டு, போக்குமிருமனோசிலேயும் கழஞ்சிரெண்டு பொடியாக்கிக்குகைமருந்தைப்புகலக்கேளு, போக் குமிகுவங்காரம்வகையும்வேறாய் புகட்டியதில்வெள்ளாட்டின் பாலா லாட்டே. கசுரு

ஆட்டியதைக்குகைபிடித்துப்பொடியைவிட்டுயடைவாககுகை மருந்தையடைத்துமூடி, நாட்டியிதைச்சட்டிக்குள் ளமைத்துநீயும் நன்றாகமேல்சட்டிகவிழ்த்துக்கட்டி, நீட்டியேசிலேசெய்துகெசபுடத் திற்போடு நெறுப்பாறியெடுத்ததனைத் தூளாயாட்டி, மூட்டுவாய்பி ளகப்பாமூவர்தேறு முன்பொடியைநெய்யிலேகுழப்பிடாயே. கசுசு

குழப்பியதில்நாலுகுன்றிபொடிதான்சேர்த்து கொடுத்திடவே மூன்றுதினங்கூறக்கேளு, அழப்பிலேநோயறிந்துநட்பிலூட்டு அப்பனேசிலேற்பனங்கள்தொண்ணூற்றுறுங், கழப்பொலிபோல்பறந்தோடுமதிகசித்தி காட்டுமுன்னேயெட்டுவகைமாந்தநீங்கும், தொழப்பெரியசஞ்சீவியிதற்கொப்பில்லைசொல்லுகிறேன் தாளகசுரத்தைக் கேளே. ௧௬௭

தாளகசுரம்.

கேளப்பாசூதமொன்றுதாரமொன்று கெடியானகெந்தியொன்றுமனோசிலைதான்ரெட்டி, நீளப்பாதாம்பிரபற்பமரெட்டிசமாகக்கல்வத்தில்நொச்சிச்சாற்றால், நாளப்பாரெண்டுதினம் ராப்பகலாட்டி நற்குன்றியிடையுருட்டிவைத்துக்கொண்டு, சூளப்பாதிரிபலையுமிளகும்நோய் சுரணித்துத்தேனிலொருவுண்டையூட்டே. ௧௬௮

மகாமேகசுரசம்.

ஊட்டவேயுளமாந்தைகழிச்சல்திரு மூயர்ந்துவருமெலும்புருக்கிச்சுரமாந்தைநீக்கு, மேட்டியுறுமகாமேகரசத்தைச்சொல்வோம்மேலானபலகறையின்பொடியுமுன்ன, மாட்டியேசுத்திசெய்தமண்டூரம் நோய்மைந்தனேயரவிநெய்யில்மயனம்போலே, ஆட்டுவாய்சாமமொன்றுவுலர்த்திப்பின்பு அப்பனேதூக்கிவெற்றிலைச்சாறூற்றே. ௧௬௯

ஊற்றியேபாவனைதானேழுவாட்டி யுரவுசெய்துதூளாக்கி குன்றிதூக்கி, யூற்றிடுவாய்கால்கழஞ்சிபசுவின்நெய்யி லுட்கலந்துசெய்திடவும்விஷநோய்தீரும், வூற்றியேவெண்ணைதேன்கியாழமாகும்உத்தமனேவியாதிகளுமதிகமானு,லூற்றுவாய்சாமத்துக்கொருக்கால்நீயுமொன்பதுபத்தாறுமங்கேயொழிந்துபோமே. ௧௭0

ஸ்ரீவாடரசம்.

ஒழிந்திடவேஸ்ரீவாடரசத்தைக்கேளு வுயிர்பறிக்கும்வாதகுன்மமொடுங்கியோட, அழிந்தவிந்துமாட்சிகமும்பிரேகம் அடர்சாரங்கெந்தியுடன்தாம்பிரபற்பம், பொழுந்திடநீசமனுகத்தூக்கமைந்தா புகழ்சித்திரமூலச்சார்கொண்டுவோர்நாள், தெழிந்துவிடாதாட்டிமஞ்சாடிபோலத் திரட்டிவைப்பாயனுபானஞ்செப்பக்கேளே. ௧௭௧

செப்புறேன்வெற்றிலைச்சார்விட்டரைத்துத் தின்றிடவேவாதக்குன்மந்தீருந்தீரும், செப்புகிறேனனுபானம்வாய்விளங்கத் திறமானவிந்துப்புகாயமேலாஞ், செப்புறேன்சவுட்டுப்புச்சரியாய்த்தூக்கிசே

ருமாதவளைச்சாற்றிற்சாமமாட்டி, செப்புறேன்கழஞ்சியிற்கூடக்கூட்டித் தின்றிடவேவாதகுன்மந்தெறித்துப்போமே. களஉ

சோமரசம்.

போமப்பாபித்தகுன்மங்களைக்குங்கேளு போதரியசோமரசப் போகத்தானும், ஆமப்பாசூதமொன்றுநாவியொன்று அரிதாரஞ்சரி சேர்த்து ஆட்டிநீயும், தேமப்பாதேக்கினிலைப்பூக்காய்மூன்றுந் தெரிந்திடித்துரெண்டுநாள்திறமாயாட்டி, தாமப்பாகொடிப்பலைசாரதனில் ஓர்நாள் தனித்தாட்டிக்குகையிலிட்டுச்சீலைசெய்யே. கள௩

சீலைசெய்துகுகைக்குள்ளேமூசைவைத்துதிறமாகக்குழிமேலேயெருவைவைத்து, சீலைசெய்துகுகையதுமாறுவாறச்செய்திடுவாயிப்படியேபஞ்சவாட்டி, சீலையுருபுடம்போட்டுத்தூளாயாட்டிச்சேர்த்திடுவாய்நேர்வாளப்பருப்புநேர்தான், சீலைவடிகட்டியதில்குன்றிதூக்கி செந்தாவிநெய்யதனில்திண்ணச்சொல்லே. களச

சோமரசகேசரம்.

இன்னுவிடுஞ்சோமரசகேசரத்தைச் செப்புகிறேன்சிலேற்பனமுங்குன்மம்போக, உண்ணுகிறலோகபற்பம்நாவிசூதமூற்கெந்திவெண்காரந்திரிகடுகுதானுந், தண்ணுகிரிபோலுயர்ந்ததாம்பிரபற்பந் தனியேறமிகலவுங்கப்பத்திரிதானும், பொன்னுமத்தம்விரைசங்குபற்பந்தானும் புகல்வில்வப்பழச்சதையுஞ்சரியாய்க்கூட்டே. களரு

கூட்டடாகஸ்தூரிமஞ்சள் தானுங்கூசாமல்மூன்றுநாள்கரிப்பான்சாற்றி; லாட்டடாகுன்றியிடைகுளிகைகட்டியப்பனேதேனிலிடசூயமஞ்சும்போ, மூட்டடாயீளையொடுகிராணிபோகுமூடல்வற்றுமெழுப்புருக்கிக்குன்மம்போகும், வாட்டடாசொரியாமைவிம்மிப்பித்தம்கத்தானருடல்வாதமண்டவாய்வுங், காட்டடாவுதரத்தில்வியாதிக்கெல்லாம் காட்டத்திற்றீப்போலேகருகிப்போமே. களசூ

வித்தியாதாரசம்.

கருக்கியிடும்வித்தியாதாரசத்தைக்காட்டுகிறேன்குன்மம்பீலிகையும்போக, அருககிவருஞ்சூதமொன்றுகெந்தியொன்று அப்பனேசுழினையொன்றுதாரமொன்று, பெருக்கியதாம்பிரபற்பமஞ்சேசிலையுஞ் சமனாய் பேரானதிப்பிலிபின்கியாழந்தன்னில், சுருக்கியேயோர்தாந்தானாட்டிவாங்கிச் சுகமாகக்கியாழத்தில்பாவனைதான்செய்யே. ()

செய்தவொருமருந்துதனைப்பணத்திற்பாதிதிரட்டிநீதேனிலே செலுத்திப்பின்பு, செப்பிடவேயஞ்சுவகைபிலியுந்தீரும் சீரானகெர்ப்பத்தின்சூலைக்கெல்லாஞ், செய்திவொமெயள்ளுவெல்லங்கியாழமிட்டுச் சிறுதேக்குத்திரிகடுகுசமன்தானாட்டி, செய்திவொய்வராகனிடைகியாழத்தில் தூவி செலுத்திடவும்பெரும்பாண்டுதீருங்காணேன். ()

காணப்பாபெரும்பாண்டு துண்டாய்வீழில் கியாழத்தின்வேற்பொடியைக்கழறக்கேளு, தோணப்பாமேற்கொப்புதேவதாரஞ் சுகமானதிப்பிலியும்புங்கம்பட்டை; பூணப்பா தூளாக்கிவராகன் தூக்கிப் புகட்டடாகுளிகையுடன்புசழ்ந்துநீயு, மூணப்பாவலியெடுக்கும்யோனிச்சூலை யுண்டானால்வேப்பம்விரையாமணக்கன்பருப்பே. ௧௭௬

குன்மகுடோரி

பருப்புடனேசரிகூடிநிம்பச்சாற்றில் பதமாகக்குளிகையிட்டுயோனில்பூசப், பெருப்பமுள்ளவலிதீருமுதரவலியினால் பேதுபடவுள்ளுக்குக்கொடுத்துவாநீ, விருப்பமுள்ளகுன்மத்தின்குடோரிசொல்வோம், வெண்காரம்கெந்திரசம்நாவிதாரம், உருப்பொதிந்ததிரிகடுகுதிரிபலையுஞ்சமனு யுறப்போடுயிவைக்குநேர்வாளந்தானே. ௧௮௰

வாளமதைச்சரியாக்கியிஞ்சிச்சாற்றில்மாட்டுவாய்தினமொன்றுமயனம்போலே, நீளவேயாட்டுநீகுன்றிபோலேநினைவாகவுருட்டியேகுன்றிச்சாற்றில், மாளவேகுன்மகளெட்டுஞ்சொல்லில்மைந்தனேகொடுத்திடவேவலிகள்தீரும், சூளவேபாண்டுகுன்மம்பாண்டுநீங்கச் சூட்டுகிறேன்குடோரிதன்னைச்சூட்டுறேனே. ௧௮௧

சூட்டுகிறேன்வெங்காரம்நாவிகெந்தி சுகமானதாம்பிரகற்பங்காந்தபற்பம், நாட்டுபுகழ்திரிபலையுந்திரிகடுகுதானும் நற்கடுகுரோகணியுஞ்சித்திரமூலம், மாட்டுநீயெவாச்சாரஞ்சத்திசாரம் மாயாதபஞ்சவுப்புவாய்விளங்கம், கூட்டுநேர்சம்பாகந்தூளாயாட்டிக்குறையாமல்நேர்வாளம்பாதியாமே. ௧௮௨

பாதியாம்வாளத்துக்கெட்டிவித்துப் பாங்காகத்தூளாக்கியெல்லாமொன்றாய், நீதியாமாதளம்பழச்சாறுவிட்டு நீட்டியேயஞ்சுதினமாட்டிப்பின்பு, சேதியாயேழுதினங்கரிபபான்சாற்றில்திறமாகவாட்டியதையுலரவைத்து, நீதியாமிஞ்சிவெல்லம்வெந்நீர்செம்பில் நீட்டவேகுன்மமுதல்நீருப்பாரே. ௧௮௩

சுரமாலிகை.

பாரப்பாசுரம்போகுமாறல்போகும்பாங்காடசன்னியொடுதோஷம்போகும், ஆரப்பாநோயறிந்துவனுபானஞ்சேர்த்து அவைபதிந்

தூவூட்டிடுவாரப்பாகேளு, நேரப்பாசுரமாலிகையைசொல்வோம்நே ரானதாம்பிரபற்பஞ்சூதங்கெந்தி.சேரப்பாமனோசிலையுந்தாளகம்வெ ண்காரம் திரிபலையுந்திரிகடுகுசேரொன்றுமே. கஅச

ஒன்றானவித்திந்துரெட்டிநேர்வாளப்பருப்பு வுறச்சேர்த்துகல் வத்தில்கரிப்பானீரால், ஒன்றாகவிருசாமமாட்டிவாங்கி வுத்தமனேகு ன்றியிடைகுளிகைசேர்த்து, ஒன்றுகுமனுபானமிஞ்சிச்சாற்றிலூட் டவேயொழிகின்றவியாதிகேளு, ஒன்றுகும்ப்லிகையும் வெப்புப்பா வை யுதாத்தில்வலிதாகமொழியுந்தானே கஅரு

சப்பிரதாயசூரணம்.

ஒழியுமப்பாநெடுநாளைவியாதியானு லுருச்செயவாமவிழ்தங்க ள்மண்டலந்தான், பொழியகின்றசப்பிரதாயச் சூரணத்தைக்கேளு பொங்கிவளர்யப்பொடியு மிருபத்தைஞ்சு, தெளியகின்றகெந்திபதி மூன்றதாகும் செயகாந்தமூன்றிரதமிரண்டுங்கூட்டி, யறியவதைக்கு மரிச்சார்விட்டுசாம மாட்டியேயொ நவில்லையாகத்தட்டே. கஅசு

தட்டடாயெருப்போலேயகலமாகத் தான்றிரும்பக்கல்வத்திட் டோட்டால்மூடி, கட்டடாரவியிலிட்டுசாமமொன்று கறுத்தங்கேப ற்பமாயிருக்குமப்பா, மட்டடாவாய்விளங்கஞ்சீரகந்தான் வாகான திரிகடுகுதிரிபலையுநேராய்,கொட்டடா தூளாட்டிபற்பத்தோடேகூ ட்டிச் சூரணித்துஎடுத்துக்கொள்ளே. கஅஎ

சகலகுன்மக்குளிகை.

எடுத்ததொருசூரணத்தில்தீரும்நோய்கேளெண்குன்மங் கிரா ணியுடனக்கினிமந்தம்,படுத்ததொருநோயெல்லாம்பறந்தேயோடும் செய்கிறேன்சகலகுன்மக்குளிகைதன்னை சடுத்ததொருஆரைப்பொ டிதானெண்பதாகும், கனகரசகெந்திசிலைகழஞ்சிரண்டாம்கொடுத்தி டுவாய்குமரிநீர்தன்னாலப்பா குறைவின்றிஒருசாமங்குழையவாட்டே

குழையவதையாட்டியேபடையாய்க்கட்டி கொடுரவியில்கல்வ த்தோடேசாமமாட்டு, விழையவேவைத்திருந்துதிரும்பவாங்கு மெ ன்பொடிதானிந்துப்புரெண்டுபங்கு, இழையாததிரிகடுகுரெண்டுபங் கு என்மகனேகடுக்காய்த்தூள்ரெண்டுமங்கே, திழையாமலிதுவெல் வாங்கருப்பன்சாற்றில்தினமொன்றுஆட்டியேவாங்குவாங்கே கஅகூ

வாங்கப்பாஆட்டையிலேகைபடாமல்வழித்ததனைவராகனிடை குளிகைசேர்த்து, பாங்கானயிஞ்சிச்சாறதனிலேனும் பஞ்சமென்ற

யொக்கியகியாழத்தாலும், நீக்காமலூட்டவேகுன்மமெட்டும்கோரான கிராணிபீலிகைவாய்வு, தாங்காதகுட்டமுதலக்கினிமந்தம் தரியாம லோடிப்போம்சத்தியந்தானே ௱௯௰

சுகந்தரசம்.

சத்திகுன்மமுதலானநோய்கட்கெல்லாம்சாற்றுகிறேனனுபான ங்கியாழமப்பா, சித்தருட்மூலமப்பாபுங்கம்பட்டை சீரானமூக்கறை வேராயில்பட்டை, பத்திபுடன் திரிகடுகுகடுக்காயிந்து பரிவாகக்கியா ழமிட்டு அப்பால்கேளு, முத்தியுறுசுகந்தரசமப்பாகேளு முறையோ டேபுலத்தியனேமுழுதுங்கேளே. ௱௯௧

கேளப்பாகெந்திரெண்டுநாவியொன்றுகிருபையுடனப்ரகசெந் தூரமொன்று, காளப்பாவிவையெல்லாம்பலமாய்த்தூக்கு நயமான சூதமிதிற்கழஞ்சியொன்று,சூளப்பாசீரகமுங்கொடிவேலிவேரும்சுக சிந்தில்சர்க்கரையும்வாய்விளங்கம், நீளப்பாநவாச்சாரம்நொச்சிவேரு ம் நினைவாகஅரைப்பலமாய் தூக்குதூக்கே. ௧௯௨

தூக்கியேநொச்சிச்சார் மாதளையின்சாறுந் துறையோடேஒவ் வொருநாள்துஞ்சவாட்டி, ஆக்கமுடன்குன்றியிடைக் குளிகைகட் டி யப்பனேபஞ்சலோகக்கியாழந்தன்னில், தாக்குடையவிஞ்சிச்சார் தேனிலாதல் தயவாகத்தசமூலக்கியாழத்தால், நீக்கிடவேபெருநோ வுமகோதரமும்வல்லை நீராமைகவுசியிவையெல்லாம்போமே. ௧௯௩

பஞ்சமூலக்கியாழம் தசமூலக்கியாழம்.

போமென்றபஞ்சமூலக்கியாழங்கேளு புகழான திப்பிலியுமதனி ன்மூலம், ஆமென்றசெவ்வியமுஞ்சித்திரமூலமடைவானவேர்க்கொ ம்புமிவையஞ்சாகும், நாமென்றதசமூலக்கியாழஞ்சொல்வோம்நயமா ணபெருமுன்னை பெருவாகைவில்வம், வேமென்றபத்திரியுங்கண்டங் காரி மேலானநெருஞ்சிவேர்சிறுவழுதலையின்வேரே. ௱௯௪

ஸ்ரீவிக்கிரமரசம்.

வேரானசிற்றாமல்லிபேராமல்லி வேர்க்கொம்புதசமூலக்கியாழ மாச்சு, பேரானகிரிச்சினங்களாறும்போகப்பேசுகிறேன்ஸ்ரீவிக்கிரம ரசத்தை, நேராகச்சுதமொடுதாம்பிரகெந்தி நீயாட்டுதினமொன்று நொச்சிச்சாற்றின், சீராகவாங்கியொருவில்லையாக்கி சிறுசட்டிக்குள் ளிட்டுமெண்தான்செய்யே. ௱௯௫

மண்செய்துதாழிதனில் படிநாலெட்டு மணலிட்டுச்சட்டிதனை யதன்மேல்வைத்து, பண்ணட்டசட்டியின்மேல்மணலுமிட்டு பாங்காகச்சாமமொன்றெரித்துவாங்கி, உண்ணுதற்குமாதளம்வேர்தூளாயாட்டி யுத்தமனேவராகனிடை தூக்கிநீயுர், வண்ணமுள்ளமாதளம்பூச்சாறுநாழி மாட்டியேகுன்றியிடைபற்பம்போடே. ௱௬௬

பற்பத்தில்திருநிறவியாதிகளு படானதீரடைப்புக்கல்லடைப்பு, வெப்பமுறுந்தசையடைப்புச்சோணைக்கட்டு வெண்கடுப்புச்சீயடைப்புவிரணக்கட்டு, அப்பமுறும்நரம்படைப்புமூத்திரக்கட்டுமிவையெல்லாந்தெரித்துபுண்ணுறுமைந்தா, சொற்பமல்லபண்டிதன்தான்பன்னிரண்டுலட்சம் சுருக்கியதைச்சூஸ்திரமாய்ச்சொன்னேன்பாரே. ௧௬௭

விஷ்ணுபராக்கிரமரசம்.

சொல்லுகிறேன்சுரதோஷஞ்சன்னிவாதந் துணுக்குடனேயுள்ளுக்குத்தனுவுக்கெல்லாம், வெல்லுமேநிட்டையிலேபாணம்போலே விஷ்ணுபராக்கிரமரசந்தானப்பா, நல்லரசம்நாவிசெந்தி வெண்காரமிந்துநலமானயெவாச்சாரஞ்சத்திசாரஞ், சொல்லுமேநோயனைத்துஞ்சுத்திசாரங் கூடவேசமமாகக்கல்வத்தாட்டே. ௱௬௮

ஆட்டுவதுமத்தஞ்சார்சாமமொன்று அப்பனேகுகையிலிட்டு வாயைமூடி, கூட்டுவதுக்குக்கிடமாய்புடத்தைப்போடு குறைதீரப் பாவனைக்குமித்தைசொல்வோம், மாட்டுவதுமீன்பித்துப்பன்றிப்பித்து மைந்தனேபன்றியென்றால்காட்டுப்பன்றி, நீட்டியதைமாவிடையாய்க்குளிகைசெய்து நீயூட்டுகுளிர்ந்தசலமிஞ்சிச்சாறே. ௱௬௯

சாறுகுந்தண்ணீராமிவற்றுக்கெல்லாம்தாக்கவேவாதசுரஞ்சன்னிவாதம், வீறுகுமயவாதம்சீதரங்கதோஷ மென்றுதின்னும்பிரலாபந்தனக்குத்தானும், மாறுதகாண்டிபங்கெம்பீரபூத மதியளிக்கும்பிரலாபசன்னிபோகும், ஆறுகுங்கிராணிமுதல் நீரிழிவுக்கெல்லாம் ஆனந்தவயிரவத்தையறையக்கேளே. ௨௱

ஆனந்தவயிரவம்.

அறைகிறேன்வெண்காரம்நாவிசூதம் அப்பனேசாதிலிங்கந்திப்பிலிநல்மிளகு, நிறையாகத்தூக்கிநீயிஞ்சிச்சாறும் சேர்சமன்சம்பழச்சாறுகலந்துக்கொண்டு, குறையாமலிரண்டுசாமமாட்டி குன்றிபோலுருட்டடாகுளிகைதானுங், கறையானகிராணிக்குமூத்தக்காசுகனத்தவதிவிடயம்பொன்முசுட்டைவேரே. ௨௱௧

முசுட்டைவேர்வேர்க்கொம்பு சரியாய்வாங்கி முறுகவதைக்கி யாழமிட்டுகுளிகையூட்டு - முசுட்டையுறு மேதிமோர்புட்டிலூட்ட மோதிவருநீர்மேகமோடுந்தூர-முசுட்டைவேர் பழச்சாற்றில்சுவாச காசம் முதிர்ந்துநின்றவேர்க்கொம்புகிராம்புஏலம்- முசுட்டைபெருர் திப்பிலியுஞ்சரியாயாட்டிமுதிர் தயிரில்வராகனிடைகொடுத்திடாமே

கொடுத்திடவேயதிசாரந்இரும்பரா கூறுனவசிரணத்துக்குறவு கேளு- அடுத்துவிவழுதனையிநீரிலூட்டு அக்கினியின்மந்தத்துக்கரைய க்கேளு-கடுத்துடையதிரிகடுகுபொடியிலூட்டு கனவாய்வுபோகவெ ன்றுல்கியாழஞ்சொல்வோம்-படுத்திடுமேஎவ்வகையும் விவர்த்தியாக ப்பஞ்சமூலக்கியாழமொடா பத்திக்கேளே. உ0௩

மேகாதிகுளிகை.

பத்தியுறுமேகாதிகுளிகைசொல்லப் படாரானவீரிழிவு மனைத்து மோடும்-புத்தியுறுஞ்சீதம்ப்பாகழஞ்சிபத்து புகழானவப்பிறஞ்சிவப்பு ரெட்டி - சித்தியறுங்கெந்தியப்பாஜம்பதாகும் திருமால்தன்தாரமது ஐம்பதாகும் வெத்தியுறுஞ்சலாசலத்துக்கழஞ்சியஞ்சு மேலானகாரீ யஞ்செந்தூரங்கேளே. உ0௪

காரீரியச்செந்தூரம்

செந்தூரங்கழஞ்சியுமோமுப்பதாகுஞ் சேர்த்திடவேமேல்மருக் தைக்சேரக்கேளு-பந்தூரப்பருத்திவிதை தேற்றன்வித்து பாங்கான வெண்குன்றிவித்துதாளும்-கந்தூரப்புளியும்வித்தோடுநல்ல கற்கட சிங்கியிவைசமமாய்யீயும்-அந்தூறக்கழஞ்சியஞ்சுவிறுத்துவாங்கி யப்ப னேமரமஞ்சள்மஞ்சன் தூக்கே. உ0௫

மஞ்சளென்னுங்கஸ்தூரிமஞ்சள்தானும் மன்னர்பணிவிலப்பனை வேர்சித்திரமூலம்- மிஞ்சாமலொருபத்துக்கழஞ்சிதூக்கிவேம்புவெள் வேல்கறுங்காவிகருவேலம்பினும்- துஞ்சவேகழஞ்சிபத்து தென்னம் பாளைத்தூளங்கேமுப்மூன்றுகழஞ்சிதூக்கு-தஞ்சமுருக் திரிகடுகுஐ ம்பதாகுந்தனித்திந்தயினங்களெல்லாம்கிருத்துக்கொள்ளே. ()

கொள்ளடாஆவரையுமருதிலந்தை கொத்தோடே யிலைச்சாற் றைப்பிழிந்துவீயும்-தள்ளடாமூன்றுதினம்வெவ்வேறாகச் சவளமேல நீ ருட்டிவாங்கிமைந்தா-எள்ளடாதேற்றன்விரைப்பிரமாணதறி லெல் மகனேதிரட்டியேயெடுத்துவைத்து-விள்ளடாகுளிகையொன்று தே னிலீயே மேகமென்றஇருபதையும்வெல்லுங்காணே. உ0எ

கியாழம்

வெல்லுதற்குக்கியாழவகைசொல்லக்கேளு மேன்பொடிக்கியா ழமிருதுடரிசுண்டை-நல்லசுண்டைநீர்ப்பூலாசூரைகடவிறஞ்சி நல மானவிரும்புலுயாவாரை பொன்முசுட்டை-வல்லவேவேணுவிலைமு த்தங்காய்த்திரிபலையு வாதுபரிதேற்றம்விரைவகைநேரேதான்-புல் வேதூளாகிப்பாண்டத்திட்டுப் புதுச்சட்டிக்குள்ளேயொருபடிதான் போடே. ௨0அ

போட்டங்கேசலம்விட்டுரவியில்சீலை புகழாகவேடுகட்டிமூன் றுசாமம்-நீட்டங்கேதிரும்புவதைக்குறுக்கிக்காச்சி நேராகக்கால்படி க்குள்கழஞ்சித்தேன்தான்-ஊட்டங்கேகாலத்தில் விரவிக்கேளு உத் தமனேபொன்முசுட்டைவேரினேடு-நாட்டங்கேதிரிகடுகுமுத்தக்கா சுநலமூங்கிலிலைதிரிபலைநேராமே. ௨0௯

நேராகக்கழஞ்சிரெண்டு தூக்கிக்கொண்டு நீர்படிதான் ரெண்டு விட்டுழக்காய்காச்சி-சீராககொட்டிடவேகிரிகைகேளு சீமேகம்மது மேகம்காளமேகம்-ஆராததசை மேகம்வாணமேகம் அத்திமேகனல் மேகம்வாதமேகம்-பேராகவேயுருக்குமாங்கிசமேகம் புகழானரெண் டுபத்துமேகம்போமே. ௨௧0

மேகத்தில்நீர்கண்டு வெந்துபுண்ணாய் மெலிவுகண்டுதாகமொடு கோகங்கண்டா-லரகத்துக்கிணங்கியதோர்சகாயமப்பாஅறைகிறேன் புல்த்தியரேமச்சமுனிஜபா-பாகத்தைகொண்டாவாரை பஞ்சாங்கம் பண்பானநிலப்பனைவேர்முத்தக்காசு - வேகத்தையடக்கியதோர்நீர்பூ லாவேரும் வேணுவிலைவில்வவேர்தேற்றும்விரையுடனே-சோகத்து க்கிசைந்ததொருபொன்முசுட்டைவேரும் துடரிசுண்டை சுண்டிசு ருளுசூரைகூட்டே. ௨௧௧

கூட்டடாயிலந்தைவேர்மாதளைபின்வேருங்கூறரியமுந்திரிகை ப்பேச்சம்பழமும் - நாட்டடாநெல்பொரியுஞ்சீனி கற்கண்டுநாயகல் பொன்னுங்காணிவேர்சமனேர்கழஞ்சி-பூட்டடாதூளாகியிருநாழிநீ ரில் பொடிபோட்டுஎட்டொன்றாய்குறுக்கிக்கூட்டு-மூட்டடாகுணங் காணுஞ்சஞ்சீவியப்பா மோசமில்லைபுணரதாகம்நீர்ச்சூடுப்பாமே.

ஷீயகாசத்தற்குக்கண்டங்காரிநெய்

போகாதக்ஷயகாசம்போகமைந்தா புகழ்கண்டங்காரிநெய்யை ப்புகலக்கேளு-வாகானசமூலமெல்லா மிடித்துச்சாறு வாங்கடாபடி

யொன்றுநெய்தானென்று-பாகமுடன்கலந்ததின்மேல்பாகங்கேளு பருநெல்லிசிறுதேக்குச்சிற்றரத்தை-சேகரமாம்வெட்பாலை கீழ்க்காய்நெல்லிசிறுகாஞ்சொரியுஞ்சாரணையின்வேரே. ௨௧௩

